செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

சிலம்பு-௪௯] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௬, பங்குனி (April '75) [பரல்-[illegible]

‘செந்தமிழ்ச் செல்வி’

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர் சென்னைப் பல்கலைக்கழகம்

உ. ‘சித்தாந்த கலாநிதி’, உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், மதுரை

ந. திரு. கொண்டல், சு. மகாதேவன் அவர்கள், எம். ஏ., பி. எல்.,
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை.

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங்
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

ரு. செந்தமிழ்க் கலைமணி, வித்துவான்,
பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள்.
பி.ஏ (ஆனர்சு), (லண்டன்) எம்.ஏ., பி.ஓ.எல். (சென்னை)
கொழும்பு

சு. புலவர் இரா. இளங்குமரன்,
திருநகர், மதுரை-6.

எ. திரு இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

திருவள்ளுவர் ஆண்டு 2006—2007

இராட்சச ஆண்டு
வாக்கிய
சைவப் பஞ்சாங்கம்


பல ஆண்டுகளாகப் பஞ்சாங்கத்தில் பழகிய சோதிடர் ஆர்க்காடு வே. கணநாத நாயகர் அவர்களால் நன்கு ஆராய்ந்து கணிக்கப் பெற்ற இப் பஞ்சாங்கம் நாள், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் இன்னபிற செய்திகளைத் திருத்தமாகத் தருவதோடு, பலாபலன்கள், சோதிடம் குறித்தற்கு வேண்டிய பல குறிப்புகள் ஆகியன, ஆகம முறைப்படி இதில் கூறப்பட்டுள்ளன. இது சைவப் பஞ்சாங்கமாதலால் கூடுமான வரையில் நல்ல தமிழில் அமைந்துள்ளது பயனுள்ள பஞ்சாங்கம்.

விலை ரூபாய் ஒன்று

'மழை வேண்டல்' வழிபாடு (9-3-75)



வள்ளலார் மண்டபத்தில் வழிபாடு நடைபெற்ற காலை
ஓதுவார்களும் கழக ஆட்சியாளரும்



அன்று மாலை 'மழையே வா' என்றநூலை வெளியிட்டு
உயர்நீதி மன்ற நடுவர் எஸ். மகாராசன் அவர்கள் உரையாற்றுதல்

[பக்கம்: ௪௨௨

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு சசு	திருவள்ளுவர் ஆண்டு உ௦௦சு, பங்குனி ஏப்ரல் 1975	பரல் அ

ஆவியுலகத் தொடர்பாளர்வழிக் காணுவுலக வாழ்நர் மறைத்திரு மறைமலையடிகளார் முதலியோர் வழங்கிய கருத்துரைகளும் வாழ்த்துரைகளும்

[முன் பரல் எ, பக்கம் ௩௩உ இன் தொடர்ச்சி]

மறைமலையடிகள் நூல்நிலையத்தின் முதலாண்டு நினைவு விழா 13—9—1959 ஞாயிறு மாலை 5 மணிக்கு நூலகக் கட்டடத்தின்முன் வனப்புற அமைக்கப்பெற்ற பந்தரின்கண் உயர்நீதிமன்ற நடுவர் மதிப்புமிகு வி. சுப்பிரமணிய நாடார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் நூலக வியலறிஞர் சனுர்த்தன நாயுடு, ஆட்சிமொழிக்காவலர் கீ. இராமலிங்கனுர், பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம், டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார், இன்றைய நலத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், இரா. பால கிருட்டிண முதலியார் ஆகியோர் மறைமலையடிகளார் தனித் தமிழ்த் தொண்டினைப் பற்றியும் இந்தி எதிர்ப்பியக்கத்துக்கு வலிவூட்டியமையினைப் பற்றியும் தாம் ஆய்ந்த 4000 நூல்களை யும் தமிழ் மக்கட்கு நன்கொடையாக வழங்கிய பாங்கினைப் பற்றியும் சிறப்புற எடுத்துப் பேசினர்.

அவ்விழாவுக்குத் திரு. வி. க., தேசியகவி சுப்பிரமணிய பாரதியார், கவிமணி தேசியவிநாயகம் பிள்ளை, திராவிடமணி வே. முத்துசாமி ஐயர், மறைத்திரு ஞானியாரடிகள், கழக அமைச்சராயிருந்த வ. திருவரங்கம் பிள்ளை, தனித்தமிழ்த்

திருவாட்டி தி. நீலாம்பிகையம்மையார் ஆகிய எழுவரும் இயக்குநர் கையைப் பிடித்து எழுதியனுப்பிய வாழ்த்துரைகள் வரப்பெற்றேன். அவை விழாவிலே படிக்கப் பெற்றன. அவற்றைப்பற்றி விளக்குவதாக முன் இதழ் ௩உ௫ஆம் பக்கம் அடிக்குறிப்பின்கண் எழுதியுள்ளேன்.

மறைத்திரு மறைமலையடிகளார் வாழ்த்து மட்டும் இயக்குநரை இயக்கி எழுதப்பெற்றுத் திருநெல்வேலி அமீது அச்சகத்தில் அச்சிடப்பெற்று வந்தது. ஏனையோர் வாழ்த்துகள் கையெழுத்துப்படிகளாகவே தனிக்கோப்பில் என்னிடமிருக்கின்றன. இயக்குநர் அவர்கள் கையைப்பிடித்து ஆவிகள் எழுதும்போது அவ்வெழுத்து முற்றிலும் இயக்குநர் எழுத்தாகவோ அல்லது ஆவியின் எழுத்தாகவோ இருப்பதில்லை. ஆனால் இயக்குநர் எழுத்தினை ஒத்தது போலவும் ஆவியின் எழுத்தினை ஒத்தது போலவும் சிற்சில எழுத்துகளில் மட்டுந் தோன்றுகின்றன. ஆனால் நடைமட்டும் எந்த ஆவி இயக்குநரின் கையைப்பிடித்து எழுதுகின்றதோ அந்த ஆவியினதாகக் காணப்படுகின்றது. போலிகைக்காக என் அருமைத் தமையனாரும் கழக அமைச்சருமான திருவரங்கம்பிள்ளை அவர்கள் வாழ்த்துரையின் கடைசிப்பத்தியினையும், கவி சுப்பிரமணிய பாரதியார் வாழ்த்துரையின் கடைசிப்பத்தியினையும் படம் பிடித்து அச்சுக் கட்டை செய்து இதன்கண் பதித்திருக்கிறேன். அவ்வாழ்த்துகள் முழுவதும் படிக்கும்பொருட்டுக் கடைசிப்பத்திகட்கு மேலுள்ள பகுதிகள் அச்சுக் கோத்துப் பதிக்கப் பெற்றிருக்கின்றன. அவ்வாழ்த்துகளில் முதல் வரி முதல் இறுதிவரை முடிய ஒரேபடியான கையெழுத்தாக இருப்பதுவே உண்மையுணர்த்துகின்றது.

திருவருளே துணை

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் ஆதரவிலமைத்த நூலகமாம், மறைமலையடிகள் நூலகத்தின் தலமாம் சென்னையில் நிறைவுறு முதலாண்டு விழாவிற்கொரு வாழ்த்துரை வழங்கத் திருவருளை வழுத்தி அதற்கொரு வாய்ப்பினை யளித்த, இயக்குநரையும் கழக, சங்க வமைச்சரையும் வாழ்த்தி யுரை வழங்குகின்றேம்.

யாமாகிய திருவரங்கம் பிள்ளைக் கழக வமைச்சராகப் பணிபுரிந்தேம் என்பதை இங்குக் குறித்தல் நன்று. யாமமைத்து நண்பர்களினுதவிகொண்டு நாட்டிய திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்தக் கழகம் இப்பணியாம் நூலகமமைத்தல் என்பதனைக் கருத்துட் கொண்டு கழக வளர்ச்சிக்கும் தமிழ்மொழி சமய வளர்ச்சிக்குமொரு தூணாய் நின்ற மறைத்திரு மறைமலையடிகளின் பெயரையே வைத்தமைத்திருத்தல் சாலச் சிறந்த தெனவும், சங்கச் செயற்குழு செய்ததோர் அரிய பணியெனவும், செயற்குழுவினருக்கு எம் வணக்கமுரித்தாகுக.

இந் நூலகமாம் மறைமலையடிகள் நூல்நிலையம் (சென்னை) பல்லாண்டு, பாரினில் சிறப்புற்று விளங்கவும், பலதரப்பட்ட நூற்களை அடியப்பாடுபோடு, சாதிப்பாருடு யென்ற கருத்து செயற்குழுவினருக்கென்றுமே நின்றிலங்காது, எல்லா ஆசிரியன்மார் நூற்களையு மதனகத்தே கொண்டு, அதை நிலைநிறுத்தலென்பதே யுயர் நோக்காயமைய, திருவருள் புரிந்து செய்ய, அதையே வணங்கி நும்மிடம் விடை பெற்றுக் கொள்கின்றோம்.

தாங்கள் காணுவலகவாசி

திருவரங்கம்பிள்ளை

வேலக
13. 9. 59

கழகமுனைருள்ளைசசா

தேவி துணை

தென்னகம் கண்டதோர் நாடாம், திருநெல்வேலிச் சீமையிலே உதித்ததோர் சங்கமாம், சைவசித்தாந்த சங்கத்தின் மொழித் தொண்டாம், தாய்மொழித் தொண்டினை நோக்கப் புதுமையொன்று கண்டேன்! தமிழனும் தமிழ் மகனும் செந்தமிழ்ச் செல்வனும், சிவத்தொண்டனும், சீருற்ற சிந்தையைச் சிதறவிடாது நூலிலே பொறித்த தமிழ் மகனும், அன்னைக்கோர் உயர்நிலையை நாட்டினிலே தென்றலென வீசவுமுள்ள காற்ருே? நீ வந்துதித்ததன்மை வியக்கின்றேன்! விழிக்கின்றேன்!! விரிக்கின்றேன்!!! விரும்புகின்றேன்!!!! வேதத்தின் அசலமென வைத்ததை மறைமலையென்று மாற்றிப் புகழ்படைத்த மறைமலையே! கண்டேன்! உன் பெயராலான நூலகத்தின் முதலாண்டு நிறைவு விழாவி லாசியுரை யுனக்கல்ல நூலகத்திற்கு வழங்க வாய்ப்பளித்தோ ரன்னை பராசக்தியைப் பாரதி பணிவுடன் வணங்குகின்றேன்.

தென்னகமே! விழித்தெழு, தாயினைப் போற்று, தாயினைப் போற்றற்கோர் துணை நூலகமே. தமிழன்னையினைப் போற்ற அறிவு புகட்டும் அரங்கெனக் காண்கின்றேன். மொழியை யறிதாயின் தன்மையை வியத்தற்கோரரிய வாய்ப்பு அறிவே. அறிவினையூட்டும் அரங்கு நூலகமே. கண்டறி கன்னியே! தாய்க்குலமே!! தாயின் வளம் செழிக்கக் கற்றறி தரணி தன்னில் தாய்க்குலமே சிறந்தது; தடையில்லை. மறுத்துரைக்க மாண்புமில்லை.

சென்னை மறைமலை நூலகமே! நீ தென்னகத்தில் நிமிர்ந்துன் புகழை ஞாயிறென வீசுவாய். தென்னுட்டுத் திலகமென நீ விளங்க அன்னை பராசக்தி அருள் செய்யே யெனப் பணிகின்றேன்.

தமிழகமே! தாய்மொழியாமுன் தமிழ் மொழியை
ப் போற்று. நம் தமிழ் என்னும் உணர்வு உண
ர்வுள் ஒளி விட்டிடும். அறிவென்ற ஒன்றை
அகமென்ற தொன்றினுள் அழிக்க முயலாதே. கற்
றறி. கவின் மிகு மொழியினைக் கற்றறி. வருகின்
றேன் விரைகின்றேன், விண்ணுலகிற்கே.
ஓம் சக்தி, பராசக்தி கிராணமுடியாதவனன்
. பாரதி

கவி சுப்பிரமணிய பாரதியார் தாம் எழுதியனுப்பிய 1961 தைப் பொங்கல் வாழ்த்தைப் படிப்பவர் அவர் தம் நடைதான் என நன்கு அறியும் பொருட்டு அதனையும் இங்கே வெளியிடுகின்றேன்.

ஓம்சக்தி

ஓர்ப்புடைத் தமிழகமே ஒளியுடைத் தமிழே! வாழ்க!

ஒளிவளர் தமிழை உலகம் உவந்திடத் தம்பணியாற்றும் திருநெல்லை நகர் வளர் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தந்திரி :

அன்னை பராசக்தி அருள்வளச் சிறப்பால் செந்தமிழ் போற்றும் வாய்ப்புக் கிட்டியமை கருத்திற் பொருத்துக! தெள்தமிழுரைத்த சேக்கிழார்! வலிவுடை அறநெறி காட்டிய வள்ளுவர்! கருத்தீர் கவிநயங் காட்டிய கல்விக்கோமான் கம்பன்! வாழ்ந்த தாய்த்தமிழ்நாட்டில் வாழ் இன்றிர்.

தமிழகஞ்சிறக்க, தமிழ்மொழி போற்றும் பண்பது பெருக்கிட, தமிழர் தன்வலி காத்திட, நம்மொழித் தூய்மை எழுகடல் கடந்து உயர்நிலை நாட்டிட, தமிழன்னையின் அடிமையறுத்து அன்னவள் சுதந்திரப் புள்ளாய்த் தமிழ்க்கொடி தாங்கி உலகெங்கணும் உல்லாசப் பவனிவர உழைத்தல் உம்கடனென உமக்கு உணர்வூட்டி அருளிட, உழவர் களித்திடும் உழவரின் குடிமை உயர்ந்திடும், தாய்த்திருநாட்டின், தமிழகத்தைப் பொங்கல் பொங்கொளி. நன்னுள் சார்வரி தை முதல்நா ளின்றென அறிந்தே பாரதி அன்னை பராசக்தியின் அருளடி பணிந்தேன்.

நம்மொழிச் சிறப்பே வாழ்க! தமிழே வாழ்க! தமிழகம் வாழ்க வெனக் கும்பிடடி பாப்பா! என விரும்பும்

சுப்பிரமணிய பாரதி
திருநெல்லைநகர்

சார்வரி தை மீ 1, 1961.

ஓம் சிவாயநம

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப் பொறுப்பாளையாளருக்கு நிலவுலகின்கண்ணின்று நீங்கி, நிமலனருள் கொண்ட சைவவுலகில் சஞ்சரிக்கும் ஆதி வேதாசலம் இன்றைய மறைத்திரு மறைமலையடிகள் வரையும் விகிதம்.

நண்பரே! யாமின்று நும் தமக்குப் புத்தாண்டாசியுரை இதனுடன் எம்மியக்குநரைக் கொண்டு வரையப்பணித்து சேர்ந்து வருகிறது. தாம் எம்முடன் திருக்குற்றால நீர்வீழ்ச்சி நிலமாநாட்டில் கலந்துகொண்ட போழ்து, யாம் தம்மிடமெடுத்துரைத்த திட்டங்கள் நும் சிந்தையிற் பதிந்திருக்குமென்ற எண்ணம் எம்தமக்குண்டு. இருப்பினும், சிலசமயக் கோளாறுகளினல் யாமும்மிடம் நெல்லையில் வைத்து நேர்முகமா யுரையாட எம்கூத்தன் திருவுளமில்லை யெனலாம். கருத்திற்கொண்டே, எம்மியக்குநர்வழி இரு கடிதங்களும், நும்தம் நேர்முகத் தானெரு சிறு வழியனுப்பு கடிதமும் வரைந்தேம்.

செல்வரே! அது குறித்து நும் சிந்தையில் எந்தவிதக் கருத்து வேற்றுமை யெழாதென எமக்கு நன்னம்பிக்கை இருப்பினும் ஏதோவென தாம் சிந்தையிற் கொள்வீரென ஓர் ஐயம் எம்மனத்துள் அம்மை அம்பலவாணர் அருளால் ஏற்படுகின்றது. அவ்வித ஐயப்பாடிருக்குமாளுல், அதைத் தாம் தம் சிந்தையினின்று சிற்றமதில்லாது களைய, அம்மை அம்பலவாணனே அருளளிக்க வேண்டுமென யாமன்புடன் அவனை வேண்டுவேம்.

நாமின்று நும் நெல்லைக் கழகப் புத்தாண்டு கணக்கிடுதல் விருந்திற் கலந்தேம். நும் நேர்மையுறு கருத்தினுல் கழகநிலை உயர்ந்து நாட்டிற்கு வேண்டும் நலமுள அறங்கள் பலவாற்றிற் பெரும் பெயர் கொண்டு பல்லாண்டு தழைத்தோங்க அம்மை அம்பலவாணன் தானருளிய தகுதி யுள்ளானென்பதை எம்மகமதில் நிறுத்திப் பன்முறை வழுத்தி வருவேமென்பதை நும்தம்மிடம் சேர்க்கவே இக் கடிதமெழுதத் தூண்டுகோல்.

அம்மை அம்பலவாணனருளால் நலமும்
சிறக்க வாழ்க. சிந்தையிலவன் திருநாமமே
என்றும் நின்றிலங்க அவனை வழுத்தி இதனை
முடித்துக் கொள்கின்றேம்.

நும்பால் அன்பு கொண்ட
நண்பர்
திருமறைமலையடிகள்.

ஆங்கிலநாள்:
17. 8. 59.

நெல்லை.

மறைத்திரு மறைமலையடிகளார் இயக்குநரை இயக்கி எழுதிய கடிதத்தின் கடைசிப் பகுதியினையும் படம் பிடித்து அச்சுக்கட்டை செய்து பதிக்கப் பெற்றிருப்பதைக் காண்பவர் முழுவதும் இயக்குநரின் எழுத்தாகவே இருப்பதைக் காணலாம்.

செல்வி சிலம்பு 35 பரல் 2இல் மறைத்திரு மறைமலையடிகளார் 1961 தைப்பொங்கல் வாழ்த்துக்கனுப்பிய விளக்கம் வெளியிடப்பட்டுள்ளது. அவ்விளக்கத்தின் அடியில் "மறைமலை

யடிகள் இயக்குநர் கருத்திற்றிளைத்து இயக்கியவர், 'நெல்லை' என்று எழுதப்பெற்றிருக்கின்றமையால் உணர்த்தி எழுதப்படுகின்ற செய்தி தெளிவுற விளங்குகிறது. மேலும் திருவருள் கைவரப்பெற்ற ஒருசில ஆவிகள் தாங்கள் அனுப்பிய வாழ்த்துகளில் இயக்குநர் கையைப்பிடித்து எழுதியதாகவும் காணப்பெறுகின்றது. அவை பின் இதழில் வெளியிடப் பெறும்.

மேலே கூறியவற்றிலிருந்து ஆவிகள் இயக்குநரை இயக்கி எழுதும் முறை ஒன்று, கையைப்பிடித்து எழுதும் முறை மற்றொன்று என்பது விளங்கப்பெறும்.

மறைமலையடிகள் விழாவுக்கு எழுதியனுப்பிய வாழ்த்து சிலம்பு 34 பரல் 2இல் வெளியிடப்பெற்றுள்ளது. அவ்வாழ்த்துகளைக் கேட்டபின் என் பெருமதிப்புக்குரிய இன்றைய நலத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் என்மீது நம்பிக்கையில்லாமல் கட்டுமானமாக இருக்கலாமோ என்று கூறினர். (நண்பர்களில் வேறு சிலர் பகடி பண்ணியதுமுண்டு).

அதனைக் கேட்டு ஆவியுலகு வாழ்நர் மறைத்திரு மறைமலையடிகளார் 'இயற்கை' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரை 34ஆம் சிலம்பு 2, 3, 4ஆம் பரல்களில் வெளிவந்திருக்கிறது. அதனைப் படித்து உண்மையுணரும்படி வேண்டிக்கொள்கிறேன்.

கழகம் ஆண்டுதோறும் செலவு நீக்கிப் புத்தக விற்பனையில் கிடைக்கப்பெறும் ஊதியத்தில் பாதி அறநிலையங்கட்கு ஒதுக்கப்பெறுந் தொகைக்கு நடுவணரசு வரி விதித்தமைபற்றி மறைத்திரு மறைமலையடிகளார் விரும்பி வேண்டியவாறு அன்றைய தமிழ்நாடு கல்வி நிதியமைச்சரும் இப்போதைய நடுவணரசு நிதித்துறை அமைச்சருமாகிய என் இதயங்கவர்ந்த மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்கள் முன்வந்து வரி விலக்களிப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். அதன்பின் மறைத்திரு மறைமலையடிகளார் மாண்புமிகு கல்வி நிதியமைச்சரவர்கள்பால் அன்பு மீக்கூர்ந்து அவர்கட்கு 1960 முதல் நான்கு ஆண்டுகள் தொடர்பாகத் தைப்பொங்கல் வாழ்த்துகள் இயக்குநரவர்களை இயக்கி எழுதி அனுப்பி வைத்தருளினர்கள்.

அவ்வாழ்த்துகளோடு தமியேனுக்கும் மறைத்திரு மறைமலையடிகளார் தனிக்கடிதங்கள் எழுதி அவற்றைக் கல்வி நிதியமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களிடம் நேர்முகத்தான் தாம் யாத்த நூல்களிற் சிலவற்றைக் குறிப்பிட்டு அவற்றோடு மங்கலப் பொருள்களும் சேர்த்து ஏற்புவிக்கும்படி ஆணையிட்டருளினர்.

1960 சனவரி 14 (விகாரி தை க) இல் மறைத்திரு மறைமலையடிகளார் தமியேனுக்கு எழுதியனுப்பிய தைப்பொங்கல் வாழ்த்தினையும் அதனை நேர்முகத்தான் மங்கலப் பொருள்களுடன் தாம் யாத்த நூல்களிற் சிலவற்றை வழங்குமாறு பணித்தெழுதிய கடிதத்தினையும் அடியிற் கண்டு மகிழ்க.

அம்முறையில் அடிகளார் யாத்த நூல்கள் அனைத்தும் வழங்கப் பெற்றுள்ளன என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடிகளார் எனக்கெழுதிய கடிதம் வருமாறு:

ஓம்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வமைச்சர் சென்னையம்பதியுறைச் செல்வர் திரு. சுப்பையா பிள்ளைக்கு, காணுவுலகவாசி மறைமலை வணக்கம்.

எம் சிந்தையில் விழைந்ததோர் விழைவினை இத்துடன் சென்னை மாநிலக் கல்வி, நிதித்துறை அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கட்கு, தமிழர் திருநாளாம் தமிழ்த் திருநாள் பொங்கற்றிருநாளில் வாழ்த் தொன்றினை, எம் இயல்புக் கெட்டியவாங்கு வரைந்தித்துடன் அனுப்புகின்றனம். செல்வராம் தமக்கு விருப்பிருப்பின், யாம் நும் பூவுலகிற்கண் வாழ்ந்தகாலை வரைந்த நூற்களை (யாம் கருத்துட் கொண்டதில், மதியமைச்சராம் கலவித்துறை யமைச்சருக்கு மக்கள் நூறுண்டு உயிர் வாழ்க்கை I&II, மனிதவசியம் அல்லது மனக்கவர்ச்சி, மரணத்தின்பின் மனிதர் நிலை, கோகிலாம்பாள் கடிதங்கள், தமிழர் மதம், மாணிக்க வாசகர் வரலாறும் காலமும் I&II ஆகிய ஆறுநூல்களை (எட்டு எண்கள்) பரிசளிப்பதென நன்முடிவிற்கு வந்ததை அறிக்கை செய்கின்றனம். அவை கலிக்கா கட்டுடனும், கவினுறு உறையிட்டுக் கொடுத்தல் நன்றெனவும் எண்ணுகின்றேம்.

தமக்கு விருப்பிருப்பின், எம் பணியைத் தாம் கொண்டு எம் வாழ்த் தஞ்சலையும், பரிசுகளையும் தாமே நேர்முகத்தான் பொங்கல் திருநாளாம் தைத்திருநாளில் கொண்டு அளித்தல் நன்றென வரைகின்றனம்.

அன்பன்,
மறைமலை
காணுவுலகவாசி (நெல்லை)

ஆங்கிலநாள்
11—1—60

அடிகளார் மாண்புமிகு தமிழ்நாடு கல்வி நிதியமைச்சர் சி. சுப்பிரமணியமவர்கட்கு எழுதிய தைப் பொங்கல் வாழ்த்து வருமாறு:

ஓம்

தோற்றத்தின் திகழொளியாய்த் திகழ்ந்துவரும் பேறுபெற்ற பெருமைசால் பெரும! ஞாயிற்றினொளியுடன் இயைந்ததோர் தேயத்தின் தேற்றத்தின் தெளிபொருளை யறிந்த தீர!

கருதற்கு ஒண்ணாத கவினுறு உலகுறை காணுவுலகவாசியெனத் தம்மிடம் விருப்ப வேண்டுதலொன்றினைப் பொருத்த, அதற்குறு துணையளிக்கும் அமைச்ச!

தம் திருமுன் திருவருட்டுணைகொண்டு எம் இயல்பிலே தோன்றிய என்னுடன் திக்கெலாம் புகழுறும் திருநெல்லையம்பதி இயக்குநராம் எம்மிளைஞன் வழி, விருப்புடன் வரையப் பணித்ததோர் விருப்புறு விழைவின் தோன்றலாம் அஞ்சலென்ற வாழ்த்துவழி வணக்கம் மறைமலை.

பெருமைசால் பெரும!

கருவியும், காலமும், செய்கையும், செய்யும் அருவினையும் அறிந்தொழுகும் அறிவுடை அமைச்ச! அறிவு, உரு, கல்வி, செறிவுடைச் செம்மைசால் செம்மால்! இனியர் இனமுறையரென் றிகழாது, நின்ற ஒளியொடொழுகும் உத்தம! "கூருமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும், மாறுநீர் வையக் கணி" யென்றறிந்தொழுகும் அருட்டிரு அமைச்ச!

அவையறிந்து ஆராய்ந்து சொல்லும் அறிவும், இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுந் திறனும், ஒளியார்முன் ஒள்ளியராய், வெளியார்முன் வான்சுதை வண்ணத்தராய் விளங்குந் தன்மையும், பொருள், கருவி, காலம், வினை, இடமென இவ்வைந்தும் இருள்தீர எண்ணி யாற்றுந் திறனும், அவையஞ்சா அருந்திறனும் கொண்டு தனித்ததோர் திருமகனுய்த் திருவருட்டுணைகொண்டு சிறக்க வாழ, இருபுனலும், வாய்ந்த மலையும், வருபுனலும், வல்லரணும், நாட்டின் நலமெனக் கொண்டு நிதியொதுக்கி நெறியுடை வரம்பினின்று வழுவா தொழுகும் வண்ணமும், அலகுடை நீழலர் அறங்காத்தும், எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும், கண்ணென்ப வாழும் உயிர்க்கென, வள்ளுவருரைத்த வாய்மொழி அறிந்தொழுகுந் திறனு மீக்கூர்ந்து, அதற்குறு பணிகளைப் பாருளோர் பயனுறுவழியிற் புரிய, ஒப்புயர்வில்லாச் செந்தமிழ்த்தேன் பிலிற்றும் பைந்தமிழ்க் கல்லூரி பல நிறுவ, வலி தர, வையத்துப் புகழொடு வாழ, அலகுடைச் செல்வராந் தமிழர் தனித் திருநாளாம், தமிழர் தம் பெருநாளாம் இத் தைத் திருநாளாம் பொங்கற் பெருநாளில், தம்மின்புறு திருமனைக் கிழத்தி, பெறலரும் நன்மக்கள், இன்புறு சுற்றம், இவருடனியைந்து என்றுமே நன்றுவாழ, நாட்டிற்கு விறுடன் பணியாற்ற, நீடிய ஆயுள் நல்க, என்றுமே எஞ்சிந்தையுறை அம்மை அம்பலவாணனை, ஆடகச்சீர் மணிக்குன்றை, வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி, உண்மையுமாய், இன்மையுமாய்க் கோனாகிக் கூத்தாட்டும் விடையேறும் வித்தகனை, கயன் மாண்ட கன்னிதன் பங்கன் தன்னை இறைஞ்சுவேம்; ஏத்துவேம்; போற்றுவேம் இன்முகத்தான் எளியனும் மறைமலை என்றுமே.

கருத்தினிலே களங்கமில்லா மதிகொண்ட மதியமைச்ச!

இத்துடன் வரும் எளிய பரிசினை இன்முகத்தான் ஏற்றுக் கிடைக்குந் தருணத்துக் கற்றுய அன்று, களைப்பினைப் போக்குமென யாம் வரைந்த அப்பரிசினை அகமுக மலர்ந்தேற்று எம்மைப் பெருமைப்படுத்துவான் வேண்டி வினயத்துடன் விரும்பி வேண்டுகின்றனம் மறைமலை.

வாழ்க! நீ வையத்து வாழ்க! நீ சிறக்க வாழ்ந்து,
வாழ்க! நீ நீடு வாழ்க! வணக்கம்.

1960 விகாரி தை 1.

மறைமலை
காணுவுலகவாசி, நெல்லை

உயிர்மெய்ம் முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

புல்[6]—துளைத்தற்கருத்து வேர்ச்சொல் (தொடர்ச்சி)

[போடு—தெ. பெட்டு ஒ. நோ : *E.* put. *OE.* potian, *L.* posit, pono, *E.* pose.]

புள்—பிள். பிள்ளுதல்=(செ. கு. வி). இரண்டாகவோ பலவாகவோ பிளந்து விடுதல். 2. துண்டு படுதல். அப்பளம் பிண்டு போயிற்று. (உ. வ.). 3. மனம் வேறுபடுதல், நட்புப் பிரிதல். இருவர்க்கும் பிட்டுக் கொண்டது. (உ. வ.). (செ. குன்ரு. வி.). 1. பிடுதல். ''அன்னையவள் தரும் பிட்டுப் பிட்டுண்டாய்'' (குமர. பிர. மதுரைக். 1.). 2. தகர்த்தல். ''முடியொரு பஃதவை யுடனே பிட்டான்'' (தேவா. 883 : 8).

க. பிளிகு (g).

பிள்—பிள. பிளத்தல்=(செ. கு. வி.). 1. வெடித்தல், ''வேய்பிளந்துக்க வெண்டரளம்'' (கம்பரா. தாடகை. 8). 2. திறத்தல். ''வாய் பிளந்துக்க'' (ஷெ. ஷெ). (செ. குன்ரு. வி.). 1. இரண்டாக வுடைத்தல். ''மலை கீழ்து பிளந்த சிங்கம்'' (திவ்-திருவாய். 7 : 4 : 6). 2. வெடிக்கச் செய்தல். 3. ஊடுருவுதல். ''ஒண்டழல் விண்பிளந் தோங்கி'' (திரு வாச. 18 : 8). 4. பாகு படுத்துதல், பகுத்தல். ''யாதும் பிளந்தறியும் பேராற்றலான்'' (சிறுபஞ். 58). 5. வெல்லுதல். அவனைப் பேச்சிலே பிளந்து விட்டான். (உ. வ.).

பிள—பிளவு=1. வெடிப்பு. 2. விரிந்துண்டாகுஞ் சந்து. 3. பிரிவு. 4. பிரிந்திசைப்பு. ''இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவு படாது ஒற்றுமைப்பட'' (தொல். சொல். 412, சேனு).

பிள—பிளவை=1. பிளக்கப்பட்ட துண்டு. ''பைந்நிணப் பிளவை'' (மலைபடு. 176). 2. வெடிக்கும் சிலந்தி வகை.

பிள—பிளாச்சு=கிழித்த மூங்கிற் பட்டி.

பிளாச்சு—பிளாச்சி.

பிளாச்சு—பிளிச்சு=மூங்கிற் பட்டி. (சீவக. 634, உரை).

ஒ. நோ : *MDu.* splitten, *G.* spleissen, *E* split.

பிள—பிளா=வாய் விரிந்த இறை கூடை (யாழ்ப்.).

பிளா—பிழா=1. வாய் விரிந்த ஓலைத்தட்டுக் குட்டான் "மலர்வாய்ப் பிழாவிற் புலர வாற்றி" (பெரும்பாண். 276). 2. இறை கூடை. "ஓங்கு நீர்ப் பிழாவும்" (சிலப் 10 : 111).

பிழா—பிழார்=இறை கூடை. (சூடா).

பிழா—பிடா—பிடவு—பிடகு—பிடகம்—1. வாய் விரிந்த பூந்தட்டு. 2. பூக்கூடை. 3. பூந்தட்டுப் போன்ற புத்தமறைப் பகுதி, முப் (திரி) பிடகத்துள் ஒன்று. "பெரியோன் பிடக நெறி" (மணி. 26 : 66). 4. நூல். (திவா.). 5. தட்டில் இடும் ஐயம் (பிச்சை). (சது), 6. வெகுக்கும் கொப்புளம். "வெம்பிடகப் பிணியால் மேனி வெடிப்புண்டு" (திருக்காளத். பு. 17 : 31).

வ. பிடக (t).

பிடகம்—பிடகன்=திரிபிடக ஆசிரியனான புத்தன். (பிங்).

பிடகு—பிடக்கு=புத்தர் பிடக நூல். "பிடக்கே யுரை செய் வார்" (தேவா. 245 : 10).

பிடகு—பிடகை=பூந்தட்டு. பிடகைப் பெய்த கமழ்நறும் பூவினர்" (மதுரைக். 397).

வ. பிடகா (t).

பிள்—பெள்—பெட்டி=1. அகன்ற வாயுள்ள பனைநார்க் கூடை. 2. அகன்ற வாயுள்ள மர அல்லது மாழைக் கலம். 3. வண்டி யோட்டுபவன் இருக்கைக்குக் கீழுள்ள பெட்டி போன்ற இடம். 4. வண்டி யோட்டுபவன் இருக்கை. 5. பெட்டி போன்ற தொடர் வண்டிக் கூண்டின் அறை. 6. வழக்காளர் கூண்டு. 7. சுண்ணாம்பு அளக்கும் முகத்தலளவை.

பெட்டி—வ. பேட்டி.

பெட்டி—பெட்டகம்=1. மரப் பெட்டி. "ஆங்கிலங்கும் அளப்பரும் பெட்டகம்" (திருவாலவா. 27 : 22). 2. மணப் பெண்ணிற்கு வரிசை கொண்டு செல்லும் கட்டுப் பெட்டி. (W).

பெட்டகப் பெட்டி=மரம் இரும்பு முதலியவற்றாலாகிய பெரும் பேழை. பெட்டகம்—வ. பேட்டக.

பெள்—பேள்—பேழ்=1. அகலம். 2. பெருமை (பிங்).

பேழ்வாய்=பெரிய வாய். "பிறழ்பற் பேழ்வாய்........... பேய் மகள்" (திருமுரு. 47).

பேழ்—பேழை=1. பெருமை. "பேழை வார்சடை" (தேவா 853 : 6). 2. பெட்டி. 3. கூடை. 4. சிறு படகு.

பிள்— பிடு. பிடுதல்=இரண்டாக அல்லது துண்டு துண்டாகப் பிளத்தல்.

பிடு—பிடுகு=வானம் வெடிப்பது போன்ற இடி. ''பெரும் பிடுகு'' (S. I. I. ii, 341).

தெ., க. பிடுகு (g).

பிடுகு—பிடுங்கு. பிடுங்குதல்=(செ. கு. வி). 1. உடைதல். வெள்ளத்தால் குளக்கரை நடுவிற் பிடுங்கிவிட்டது. (உ. வ.). 2. அடைப்பு விலகுதல். தண்ணீர்த் தொட்டியில் அடைப்புப் பிடுங்கிவிட்டது. (உ. வ.). 3. வெடித்தல். குழியில் அல்லது குழாயில் வெடி மருந்து பிடுங்கிவிட்டது. (உ. வ.). 4. வெளிப் படுதல். வெளிக்குப் போகாது நீண்ட நேரம் அடக்கி வைத்ததனுல் பிடுங்கிவிட்டது, (உ. வ.).

(செ. குன்ரு. வி) 1. பறித்தல். கீரைப் பிடுங்குதல். (உ. வ). 2. வலிந்து கவர்தல். அவன் கையிலிருந்த பணப் பையைப் பிடுங்கிக் கொண்டான். (உ. வ.). 3. பெயர்த்தல் ஆறு அணையைப் பிடுங்கிக் கொண்டு போகிறது. யானை மரத்தை வேரோடு பிடுங்கி விட்டது. (உ. வ.). ''பல்லைப் பிடுங்கிப் பருந்தாட்ட மாட்டி'' (தனிப்பா.). 4. கொத்தித் தின்னுதல். பிணம் பிடுங்கிக் கழுகு. (உ. வ.). 5. கடித்தல். அந்தக் குளத்திற் குளித்தால் மீன் பிடுங்கி விடும். 6. இழுத்தல் அல்லது பிய்த்தல். உடும்புக் கறி தின்றவன் வாயாலெடுத்தால் உட்சதையைப் பிடுங்கிக் கொண்டு வரும். (உ. வ.) 7 பசி வாட்டுதல். பசி வந்து பிய்த்துப் பிடுங்குகிறது. (உ. வ.) 8. தொந்தரவு செய்தல். வீட்டிற்குப் போனுல் மனைவி மக்கள் பிடுங்கல்; வெளியே வந்தாற் கடன்காரன் பிடுங்கல்.

(உ. வ.). ம. பிடுங்ஙுக.

பிடு—பிடுகு—பிடுங்கு=ஒ. நோ : *OE.* brecan, *OS.* brekan *OHG.* brethan, *Goth.* brikan, *E.* break, L. frag, frang, fract.

பிடுங்கு பிடாங்கு=குழாய் வெடி (வேட்டு).

பிடு—பிது—பிதிர். பிதிர்தல்=1. சிறுசிறு துணிக்கையாகப் பிரிதல். 2. பழந்துணி சிதைந்து கிழிதல். 3. நொறுங்கல். ''பிதிர்ந்து போயின பிறங்கல்களேழும்'' (கந்தபு. யுத்தகாண். முதனுட். 50). 4. சிதறுதல். ''பிதிர்ந் தெழுந் தார்த்த பொடிக் குழீஇ'' (கம்பரா. பிரமாத். 100). 5. பரத்தல். ''பிதிரொளித் தவிசின்'' (தணிகைப்பு. வீராட் 78). 6. மனமயங்குதல். ''பிதிரு மனமிலேன்'' (திங். இயற். நான்மு. 84).

பிதிர் =1. பூஞ்சுண்ணம். (பிங்.). 2. பொடி. (பிங்.). 3. திவலை. (பிங்.). 4. துண்டம். ''மதிப்பிதிர்க் கண்ணியீர்'' (தேவா. 599 : 4). 5. தீப்பொறி. ''கொல்ல னெறிபொற் பிதிரின்'' (நற். 13.). 6. சேறு. ''மருப்பிற்பிதிர்பட வுழக்கி'' (கல்லா. 62 : 10). 7. கால நுட்பம். (பிங்.). 8. கைந்நொடி. (W.). 9. விடுகதை. ''கதைகளும் பிதிர்களு மொழிவார்'' (கம்பரா. ஊர்தேடு. 139). 10. வியப்புச் செயல். ''பின்னால் தான் செய்யும் பிதிர்'' (திவ். இயற். நான்மு. 83).

பிதிர் — புதிர் = விடுகதை.

பிது—பிது—பிதுங்கு. பிதுங்குதல் =1. உள்ளீடு வெளிப் படுதல். ''கதிர் முடியுங் கண்ணும் பிதுங்க வூன்றி'' (தேவா. 56 : 10). 2. சுவரிற் செங்கல் வெளி நீண்டிருத்தல்.

கண் பிதுங்குதல் = வேலைக் கடுமையாற் கண் பிதுங்கினாற் போல் வருத்த மிகுதல்.

பிதுங்கு—பிதுக்கு. பிதுக்குதல் =1. உள்ளீட்டை வெளிப் படுத்துதல். ''பீட்பிதுக்கி'' (நாலடி. 20). 2. ஊறின மொச் சைப் பயற்றை விரலால் அமுக்கி அதன் பருப்பை வெளிப்படுத் துதல். பிதுக்குப் பருப்பு. (உ. வ.).

க. ஹிதுக்கு.

பிது — பிசு — பிசிர். பிசிர்தல் = துளியாகச் சிதறுதல். ''வல்வில் பிசிர'' (பதிற்றுப். 50 : 6). 2. பிசுக்குக் கேட்டல்.

பிசிர் =1. நீர்த்துளி. ''வான் பிசிர்க் கருவியின்'' (ஐங் குறு. 461). 2. ஊற்றுநீர். ''மலிரும் பிசிர் போல'' (பரிபா. 6 : 83). 3. குருத்து. ''பிசிரொடு சுடுகிழங்கு நுகர'' (புறம். 225). 4. ஆடையிலெழுஞ் சிம்பு.

பிசு—பிசுகு. பிசுகுதல் =1. கடையிற் பண்டம் வாங்கிய பின் மேலும் ஒரு சிறிது விலையின்றிக் கேட்டல். 2. கஞ்சத் தனம் பண்ணுதல். அவன் கால் துட்டுக்குப் பிசுகுகிறான்.

பிசுகு—பிசுக்கு =1 சிறு துணிக்கை, சிற்றளவுப் பொருள். 2. பண்டம் விலைக்கு வாங்கிய பின் மேலும் விலையின்றிக் கேட் கும் சிற்றளவுப் பொருள். ஒரு பிசுக்குப் போடு. (உ. வ.).

பிசுக்கு—பிசுக்கன் = புல்லன், சிறுமகன்.

பிசுக்கர் = புல்லர். ''பேதவாதப் பிசுக்கரை'' (திரு விசைப். திருமாளி. 4 : 5).

பிசுக்கு—பிசுக்கி = புல்லன், சிறியோன், போடா பிசுக்கி, (உ வ.).

பிசுக்கு—விசுக்கு=சிறு துணிக்கை.

விசுக்கு—விசுக்காணி=மிகச் சிறியது.

விசுக்காணிப் பயல்=மிகச் சிறுவன், குட்டிப் பையன்.

பிள்—பிர்—பிரி. பிரிதல்=1. கட்டவிழ்தல். மூட்டை பிரிந்து விட்டது. (உ வ.). 2. முறுக்கு நெகிழ்தல். 3. தொகுப்பு நீங்குதல். மாலை பிரிந்து கிடக்கிறது. 4. பகுக்கப் படுதல். ''பிரிப்பப் பிரியா'' (தொல். சொல். 410). 5. விலகு தல். குடும்பத்தை விட்டுப் பிரிந்து போனார்கள். (உ. வ.). 6. வேறுபடுதல். ''உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக் கும்.'' (தொல். சொல். 4). 7. பொருத்து விடுதல். 8. வகைப்படுதல். 9. தண்டப் படுதல். இந்த ஊரிற் பணம் பிரி யாது. (உ. வ.).

ம. பிரி(யுக). க. பிரி.

பிரி—பிரிவு=1. விலகல். 2. பாகம். 3. வகுப்பு. 4. வகை. 5. பகுதி. 6. கிளை.

பிரி—பிரியல்—பிரிசல்=1. பாகப்பிரிவு. 2. கூரை பிரிப்பு. 3. கட்டவிழ்வு. 4. பணந்தண்டல்.

பிள்—பிட்டு=பிண்டு உதிரியான சிற்றுண்டி வகை. ''மதுரையிற் பிட்டமுது செய்தருளி.'' (திருவாச. 13 : 16). தினைமா. (W).

ஒ. நோ : உதிரி=பிட்டு.

ம., க., தெ. பிட்டு. பிட்டு—வ. பிஷ்ட.

பிள்—பிண்டி=1. நுண்பொடி. 2. மா. ''செந்தினையின் வெண் பிண்டி'' (பதினொ. திருவீங். 44). 3. பிளந்த நாக்குப் போன்ற பிண்ணாக்கு (பிள்+நாக்கு). ''பாரிற் பிண்ணாக்கு முண்டாம்'' (காளமேகம்).

தெ. பிண்டி, து. புண்டி.

பிண்ணாக்கு—வ. பிண்யாக்க. எள், இலுப்பை, வேம்பு முதலியவற்றின் விதைகளை எண்ணெயாட்டியபின் எஞ்சிய சக்கை, பிளவுபட்ட நாக்குப் போலிருப்பதால் பிண்ணாக்கு எனப் பட்டது.

பிள்—பிண்—பிணம்=கட்டுவிட்ட (decomposed) சவம் (சா—சாவு—சாவம்—சவம்). செத்த சவம், நாற்றப்பிணம் அல்லது பிண நாற்றம் என்னும் வழக்குகளை நோக்குக.

பிண்—பிணகு—பிணங்கு. பிணங்குதல்=1. மாறுபடுதல். ''பிணங்கோ மெவரொடும்'' (திருநூற். 66). 2. ஊடுதல்.

இணங்கு என்னும் சொல்லிற்கு எதிராக, அதன் எதுகை யாக அமைந்த சொல் பிணங்கு என்பது.

பிணங்கு—பிணக்கு=மாறுபாடு. ''பிணக்கிலாத பெருந் துறைப் பெருமான்'' (திருவாச. 30 : 1).

பிணக்கு—பிணக்கம்=மாறுபாடு. '' பாம்பு கங்கை பிணக்கந் தீர்த்து'' (தேவா. 29 : 2). 2. ஊடல்.

புள் - புய். புய்தல்=1. பறிக்கப்படுதல். ''புய்ந்து கால் போகிப் புலான் முகந்த வெண்குடை'' (களவழி. 39). 2. மறைதல். ''கோலப் பகற்களிறுென்றுகற் புய்ய'' (திவ். இயற். திருவிருத். 40).

புய்த்தல்=பறித்தல்.

''புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்
புய்த்தெறி கரும்பின் விடுகழை'' (புறம். 28).

''உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையை
கறுவுகொண் டதன்முதற் குத்திய மதயானை
....
கோகுபுய்க் கல்லா துழக்கு நாட'' (கலி. 38).

''கோட்டினிற் குத்திக் குடர்புய்த் துறுத்து'' (மணி 13:47)

புய்—பிய். பிய்தல்=1. பிள்ளுதல். 2. பிரிதல். 3. கிழிதல்.

பிய்த்தல்=1. பிடுதல். 2. கிழித்தல். 3 பிரித்தல். 4. இலை, படம் முதலியவற்றைச் சிதைத்தல். 5. பறித்தல். 6. பிடுங்குதல். ''பேயு நாயு மவருடலம் பிய்த்துத் தின்ன'' (உத்தரா. திருவோல. 24). 7. வருத்துதல். 8. பிறன்கோள் மறுத்தல். அவனைப் பிய்த்தெறிந்து விட்டான். (உ. வ.).

பிய்—பியர். பியர்தல் = பெயர்தல். (S.I.I. iii, 151 : 4). ம. பியர்.

பியர்—பெயர். பெயர்தல்=1. இடம் விட்டு நீங்குதல். 2. பிரிதல். நிலம் பெயர்ந் துறைதல். (தொல். பொ. 169). 3. கிளர்தல். ''ஓதநீரிற் பெயர்பு பொங்க'' (புறம். 22). 4. உரசித்தேய்தல். 5. சலித்தல். 6. அசை போடுதல். ''வினையா விளங்கறுற மெல்குபு பெயரா'' (சிறுபாண். 45). 7. பிறழ்தல். ''நிலம் பெயரினும் நின்சொற் பெயரல்'' (புறம். 3). 8. மாறுதல் ''ஆணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து'' (திருவாச. 3 : 134). 9. தளர்தல். 10. கட்டு விடுதல். 11. தேய்தல், சிதைத்தல். 12. அடியிடுதல். 13. போதல். 14.

கூத்தாடுதல். 15. மீளுதல். "சூழ்ந்த நிரை பெயர" (பு. வெ. 1 : 10). 16. பணப்புழக்கமாதல். அந்தவூரில் எந்த நாளும் பணம் பெயரும். (உ. வ.). 17. பணத் தண்டலாதல். ஆயிரம் உருபா பெயர்ந்தது. (உ. வ.).

பெயர்த்தல்=பெயரச் செய்தல்.

பெயர்—பேர். பேர்தல் = பெயர்தல். பேர்த்தல் = பெயர்த்தல்.

பொள்—பள்—பள்ளம்=1. குழி. "பள்ள மீனிரை தேர்ந் துழலும்" (தேவா. 93 : 5). 2. கன்னத்தில் விழும் குழிவு. 3. ஆழம். "பள்ள வேலை பருகுபு" (இரகு. ஆற்று. 1). 4. தாழ்வு. "பள்ளமதரிய படர்சடை மேற்........கங்கை" (தேவா. 427 : 1). 5. தாழ்நிலம்.

பள்ளம்—பள்ளன்—பள்ளமான மருத நிலத்தில் வாழும் உழவர் வகுப்பான்.

பள்ளன்—பள்=1 பள்ளர் வகுப்பு. 2. ஒரு சார் பள்ளர் வாழ்க்கை பற்றிய ஒருவகை நாடகப் பனுவல். (அரு. நி.) 3. காளிக்குக் காவு கொடுக்குங் காலத்துப் பாடப்படும் பண் வகை.

பள்ளன்—மள்ளன்=மருத நிலத்தில் வாழும் உழவன். "மள்ள ருழுபக டுரப்புவார்" (கம்பரா. நாட். 18).

பள்ளன்—பள்ளி=1. பள்ளர் குலப் பெண். 2. பள்ளன் மனைவி. 3. வன்னியர் குலம். 4. வன்னியர் குலச் சிற்றரசன். "ராஜாக்கள் போகப் பள்ளிகள் வந்து புகுருமா போலே" (திவ் இயற். திருவிருத். 40, வியா. 235).

பள்ளன்—பள்ளத்தி=பள்ளர் குலப் பெண்.

பள்ளத்தி—பள்ளச்சி=பள்ளர் குலப்பெண்.

பள்ளி—பள்ளிச்சி=வன்னியர் குலப்பெண்.

பள்—பள்ளு=பள்ளர் வாழ்க்கை பற்றிய நாடகப் பனுவல்.

பள்—பள்ளி=1. படுக்கை. பள்ளி கொண்டான், பள்ளி யெழுச்சி முரசம். 2. தூக்கம். "பள்ளி புக்கதுபோலும் பரப்பு நீர்த் தண் சேர்ப்ப" (கலித். 121). 3. விலங்கு துயிலிடம். (பிங்.). 4. படுக்கையறை.

(தொடரும்)

———

சங்க இலக்கியத்தில்
முதலையும் இடங்கரும் கராமும்

(Estuarine Crocodile, Marsh Crocodile and Gharial)

[பி எல். சாமி. பி. எஸ்ஸி.]

இந்தியாவில் மூன்று முதலை இனங்கள் இருக்கின்றன. அவற்றில் இரண்டுவகை முதலைகள் தமிழ்நாட்டிலும் தென்னாட்டிலும் காணப்படுகின்றன. ஒருவகை முதலை வடநாட்டில் மட்டும் காணப்படுகின்றது. இந்த மூன்றுவகை முதலைகளைப்பற்றியும் சங்க நூல்களில் செய்திகள் காணப் படுவது கவனிக்கத்தக்கதாகும். இந்த மூன்றுவகைகளையும் முதலை, இடங்கர், கராம் என்று சங்க நூல்களில் அழைத்தனர்.

"ஒடுங்கிருங் குட்டத் தருஞ்சுழி வழங்குங்
கொடுந்தாள் முதலையு மிடங்கரும் கராமும்"

—குறிஞ்சிப்பாட்டு 256-257.

"கராஅங் கலித்த குண்டுகண் ணகழி
இடங்கருங் குட்டத் துடன்றொக் கோடி
யாமங் கொள்பவர் சுடர்நிழற் கதூஉம்
கடுமுரண் முதலைய நெடுநீ ரிலஞ்சிச்
செம்புறழ் புரிசைச் செம்மன் மூதூர்"

—புறம், 37.

குறிஞ்சிப் பாட்டிலும் புறநானூற்றுப் பாடலிலும் முதலையும் இடங்கரும் கராமும் கூறப்பட்டுள்ளது. பேராசிரியர் தொல் காப்பிய மரபியலில் முதலையும் இடங்கரும் கராமும் தம்மின் வேறெனப்படும் என்பதற்கு இந்தப் புறநானூற்றுப் பாடல் வரிகளையே காட்டியுள்ளார். ஆதலின், முதலையும் இடங்கரும், கராமும் வேற்றுமைப்படுத்தப்பட்டு சங்ககாலத்திலேயே உணரப்பட்டன என்பது தெளிவாகின்றது. இந்த மூன்று முதலை இனங்களும் அறிவியற்படி எவை என்று தெரிந்து கொள்ளலாம்.

முதலை

முதலையைப்பற்றியே சங்க நூல்களில் கூடுதலான செய்திகள் வருகின்றன.

"................. கொடுங்கழிப்
பாசடை நெய்தல் பனிநீர்ச் சேர்ப்பன்
நாம முதலை நடுங்குபகை அஞ்சான்

—நற்றிணை, 287.

"இரைதேர்ந் திவருங் கொடுந்தாள் முதலையொடு
திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கின்"
—மலைபடுகடாம் 90-91.

"கோள்வல் முதலைய குண்டுகண் ணகழி"
—பதிற்றுப்பத்து 53-8.

"கொடுந்தாள் முதலையொடு கோட்டுமீன் வழங்கும்
இருங்கழி யிட்டுச்சுரம் நீந்தி யிரவின்" —அகம், 80.

"முதலைப் போத்து முழுமீ னாரும்
தண்டுறை யூரன் றேஎம்" —ஐங்குறுநூறு, 5.

முதலை, இடங்கர், கராம் ஆகிய வகைகளில் முதலையே கொடியது. அது வாழும் துறைகளில் ஆடுமாடுகளையும் ஆட்களையும் இழுத்துச் சென்று கொன்று தின்றுவிடும். ஆதலின், 'நாம முதலை' என்றும், 'சுட்டுநர் பனிக்கும் சூருடை முதலை' என்றும் சங்க நூல்களில் இதன் கொடுமைத் தன்மையைக் கூறினர். சுட்டிக்காட்டுபவர்கள்கூட நடுங்கிக் கொண்டே காட்டும் கொடிய தன்மையுடைய முதலை என்று கூறப்பட்டுள்ளது. கடுமுரண் முதலை என்றும் கூறப் பட்டுள்ளது. சங்க காலத்தில் இயற்கைச் சூழ்நிலை இன்று போல அழிக்கப்படவில்லையாதலால் ஆறுகள் கலக்கும் கடற்கரைச் சூழலிலும் ஆறுகளிலும் முதலைகள் நிறைய இருந்திருக்க வேண்டும். ஆதலின் முதலைகளுக்கு மிகவும் அஞ்சினர். இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர்க் கேரளக் கடற்கரையில் முதலைகள் நிறைய இருந்தன. முதலைகளைத் தோலிற்காக வேட்டையாடி அழித்துவிட்டனர். கழிகளிலும், கடற்கரைச் சூழலிலும், ஆற்றுத் துறைகளிலும் முதலை வாழ்வதாகச் சங்கநூல்களிலும் கூறப்பட்டுள்ளது. முதலை முழு மீனைத் தின்பதாகக் கூறப்பட்டுள்ளது. முதலையின் முக்கிய உணவு மீனே. பிற விலங்குகளையும் முதலை கொன்று உண்ணும். ஆட்கொல்லியாகவும் மாறும். முதலைக்கு வளைந்த கால்கள் இருப்பதாகச் சங்க நூல்கள் கூறும்.

"நீர்வாழ் முதலை யாவித் தன்ன
ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடத்து" —அகம், 301.

முதலைகள் கரையில் வந்து வாயைத் திறந்துகொண்டு வெயில் காய்வது வழக்கமாகும். நீர்வாழ் முதலை ஆவித்துக் கிடப்பது சிலர் உரை கூறியதுபோல் கொட்டாவி விடுவதற்கன்று. எகிப்தில் உள்ள நைல்நதி முதலைகள் வாயைத் திறந்து கிடக்கும்போது ஒருவகைச் சிறு குருவிகள் அங்காந்த வாயுள்

புகுந்து பற்களின் இடையே சிக்கியிருக்கும் புழுப்பூச்சிகளைக் கொத்தித் தின்னுமாம் முதலைகளும் அக்குருவிகளுக்குக் கேடு செய்வதில்லை. ஊறு செய்யும் ஆள்கள் நெருங்கினால் இக் குருவிகள் ஒலி செய்து முதலைகளை எச்சரிக்கை செய் கின்றனவாம். இம்முறையாக ஒன்றிற்கொன்று உதவி செய்கின்றன என்று அறிஞர் கூறுவர். ஆவித்து என்ற சொல் வாயை அங்காத்தலைக் குறித்ததைக் காணலாம். இச் சொல் இன்றும் பேச்சுவழக்கில் உள்ளது. குழந்தைகளுடன் பேசும் மொழியில் ஆக்காட்டு, ஆப்போட்டு என்ற வழக்குகள் இருப்பது சங்கநூல் மரபாகத் தெரிகின்றது. முதலையின் மேல்தோல் மேடும் பள்ளமுமாக இருக்கும். குண்டுகள் துளைக்க முடியாதபடி அவ்வளவு உறுதியானது. முதலைகளைக் கொன்று தோலைப் பதனிட்டு அழகான பெட்டிகளும் பைகளும் செய்வர். முதலையின் தோலை அழகான உவமையால் அகநானூறு விளக்கியுள்ளது.

> "இருங்கழி முதலை மேஎந்தோ லன்ன
> கருங்கா லோமைக் காண்பின் பெருஞ்சினைக்" —அகம், 3.

முதலையின் மேல்தோல் ஓமை மரத்தின் கரிய அடிமரத் திற்கு ஒப்பிடப்பட்டுள்ளது. காடுகளின் பாதுகாவலராகப் பணி புரிவோர் காட்டில் உள்ள மரங்களின் அடிமரத்தைப் பார்த்தும் இன்ன மரமென்று தெரிந்து கொள்வர். முதலையின் மேல் தோல் போன்ற அடிமரம் உடைய மூன்றுவகை மரங்கள் காட்டில் இருப்பதாகக் கண்டுள்ளனர். அகநானூறு கூறுவது அத்தகையதொரு மரத்தையேயாகும். ஓமை மரத்தைப்பற்றிப் பல பாடல்கள் சங்க நூல்களில் உள்ளன. அந்தப் பாடல் களில் ஓமை மரம் Ougenia dalbergoides என்ற மரமே என்று தெளிவாகின்றது. இந்த மரம் நீரற்ற வறட்சியான இடங் களில் வளர்வதாகவும், இம் மரத்திற்கு முடமான அடிமரம் இருப்பதாகவும், உலறிய தலை உள்ளதாகவும், பொரிந்த, கரிந்த அடிமரம் இருப்பதாகவும் சங்க நூல்கள் கூறுகின்றன. யானைகள் இந்த ஓமை மரத்தை உதைத்தாலும் குத்துவ தாலும் இதன் அடிமரம் புண்படுவதாகவும், அது யானையின் புண்பட்ட கால்போலத் தோன்றுவதாகவும் கூறப்பட்டுள்ளது. செடிநூலாரும் இதுபோன்ற செய்தியைக் கூறியுள்ளனர். இந்த மரத்தின் அடிமரத்தில் மேலாக வெட்டுப்போட்டால் சிவப்பாகப் பிசின் வரும். இந்தப் பிசின் இரத்தம் போலவே இருக்கும். வெண்மையாகக் காணப்படும் உள்மரத்தின் மேல் இந்தச் சிவப்புப் பிசின் வழிவது புண்போலவே இருக்கும் என்று அறிஞர் கூறியுள்ளனர். சங்க நூல்களில் புண்தாள், போழ்

புண் என்று கூறியிருப்பதைக் காணலாம். இந்த மரத்தின் அடிமரம் கரியதாகவும் முதலையின் மேல்தோல் போலவும் இருப்பதாகவும் கூறியது போலவே செடிநூலாரும் எழுதியுள்ளனர். இந்த மரத்திற்கு *'Crocodile skin bark' இருப்பதாகச் செடிநூலார் கூறியதையே அகநானூறு சொல்லியிருப்பதைக் காணும்போது வியப்படையாமல் இருக்க முடியாது.

முதலை நீரிலிருக்கும்போது பிடித்த விலங்கையோ ஆளையோ விடாது பற்றி இழுத்துச் செல்லும். "கோள்வல் முதலைய குண்டுகண் ணகழி" என்று பதிற்றுப்பத்து (53-8) கூறுகின்றது. கொண்டதை வலிமையாகப் பற்றும் முதலை என்று கூறியுள்ளதையே இன்று 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்ற பழமொழி விளக்குகின்றது.

> "நெடும்புன லுள் வெல்லு முதலை யடும்புனலி
> னீங்கி னதனைப் பிற."
>
> —குறள், 495.

நீருக்குள் முதலைக்கு வலிமை மிகுதி என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். முதலையின் நீண்ட வாய்க்கு நீரில் ஈர்ப்புச் சக்தி மிகுதி என்று கண்டுள்ளனர். அண்மையில் செய்த ஆராய்ச்சியில் ஒரு டன் எடையுள்ள முதலைக்கு 13 டன் ஈர்ப்புச் சக்தி இருப்பதாகக் கண்டுள்ளனர். இந்தியாவில் வாழும் மூன்றுவகை முதலை இனங்களில் ஆற்றிலும் ஆற்றுத்துறைகளிலும் வாழும் முதலையே ஆள்களைக் கொன்று தின்னும் கொடிய தன்மையுடையது என்று கண்டுள்ளனர். மற்ற இருவகை முதலை இனங்களும் ஆள்களைக் கொல்லா என்பது ஆராய்ந்ததில் தெளிவாகியுள்ளது.

> "கொடுங்கான் முதலைக் கோள்வ லேற்றை
> வழிவழக் கறுக்குங் கானலம் பெருந்துறை"
>
> —குறுந்தொகை 324.

கொண்டதை வலிதாகப் பற்றும் ஆண் முதலை துறையின் வழியில் யாரும் செல்லாதபடி ஆள் வழங்குதலை அறுக்கும் என்று குறுந்தொகை கூறியுள்ளதைக் காணலாம். இது மிகவும் உண்மையான செய்தியே யாகும். மேற்குக் கடற்கரையில் கட்ச் முதலிய தீவுப்பகுதிகளில் இன்று அரபு நாடுகளிலிருந்து வெளிநாட்டுப் பொருள்களின் கடத்தல் நடக்கின்றது. இதைத்

---

* Crocodile skin bark fissured horizontally and vertically forming rectangular plates as in ougenia etc. (Manual of Indian Forest Botany - N. L. Bor)

தடுக்க அரசு விரைவுப் படகுகளைப் பயன்படுத்தியும் முடிய வில்லை. சேறும் சகதியுமாக இருந்த இந்தக் கரைகளில் பண்டைக் காலத்தில் முதலைகள் நிறைய வாழ்ந்தன. அவற்றைக் கொன்று ஒழித்தனர். ஆதலின் இன்று யாரும் அச்சமின்றி இக் கரைகளை அணுக முடிகின்றது. இக் கரைகளில் வெளிநாடுகளிலிருந்து வரும் பொருள்களின் 'வழிவழக்கறுக்க' முதலைகளை வளர்க்கலாம் என்று ஓர் அறிஞர் கருத்து கூறியுள்ளார். மனிதர் முதலைக்கு மிகவும் பயப்படுவர். சங்ககாலத்தில் நகரங்களைப் பாதுகாக்க வைத்திருந்த அகழிகளில் முதலைகளை இட்டு வளர்த்தனர். கோட்டைச் சுவர்களில் ஏறுவதற்கு முன் அகழிகளைக் கடக்க வேண்டும், முதலைகளின் வாயில் தப்பியவர்களே கோட்டைச் சுவர்களில் ஏற முடியும்.

ஐங்குறுநூற்றில் முதலையைப்பற்றி ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது. முதலை தன்னுடைய பிள்ளையையே தின்னுமென்பதே அச் செய்தியாகும். சங்கநூல் கூறிய இச் செய்தி உண்மையானது என்று அறியும்போது வியப்படைகிறோம். ஜெய்ப்பூரில் உள்ள உயிர்க்கண் காட்சிச்சாலையில் முதல் தடவையாக முட்டைகளிலிருந்து முதலைக் குட்டிகள் பிறந்தன. உடனே முதலையின் குட்டிகளைத் தாயினிடமிருந்து அப்புறப்படுத்தினர். ஏனென்றால் தாயே தன்னுடைய பிள்ளைகளைத் தின்றுவிடும் என்று கண்டறிந்த அனுபவத்தால் தாயோடு குட்டிகளை விட வில்லை. (Even though the mother cares much for her babies, there have been cases of the parents devouring their brood. The phenomenon of cannibalism has been found to be common in the case of crocodiles). முதலையே முதலைகளை உண்பதை அறிஞர்கள் கண்டுள்ளனர். உலகத்திலேயே இந்தக் கண்காட்சிச் சாலையிலேதான் முதலைகள் இயற்கையில் முட்டையிட்டுக் குட்டிகள் பொறித்தன என்பதைக் கவனிக்க வேண்டும்.

> *"தன்பார்ப்புத் தின்னு மன்பின் முதலையொடு*
> *வெண்பூம் பொய்கைத் தவனூ ரென்ப அதனால்"*
>
> —ஐங்குறுநூறு 41

> *" தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வனொடு*
> *பிள்ளை தின்னு முதலைத் தவனூர் "* —ஐங்குறுநூறு 24

ஐங்குறுநூற்றில் சொல்லப்பட்ட இச் செய்தி இயற்கையில் உண்மையாகக் கண்ட அறிவியற்செய்தி யென்று காணும்போது வியப்படையாமல் இருக்க முடியாது. முதலை ஆறுகளிலும் கடற்கரையில் ஆறுகள் கூடுமிடங்களில் கடலிலும் கழிகளிலும்

காணப்படுகின்றன. கடலில் நீண்ட தொலைவு செல்லக்கூடிய முதலை இனம் இதுவேயாகும். மற்ற முதலையினங்கள் நன்னீரில் வாழ்வனவாகும்.

இடங்கர் என்றொரு முதலையினமும் சங்கநூல்களில் கூறப் பட்டுள்ளது. இடங்கர் என்ற முதலைவகை கானாற்றில் இருந்த தாகக் கூறப்பட்டுள்ளது. முதலையும் இடங்கரும் கராமும் அகழி களில் இருந்தனவாகப் புறநானூறு கூறியுள்ளது.

"உரவுக்களிறு கரக்கு மிடங்க ரொடுங்கி"
—மலைபடுகடாம் 211

"கன்றிய கராமு மிடங்கரு மீன்களும்" —மணிமேலை 28—18

"நீர்நிறங் கரப்ப வூழுறு புதிர்ந்து
பூமலர் கஞலிய கடுவரற் கான்யாற்றுக்
கராஅங் துஞ்சுங் கல்லுயர் மறிசுழி
மராஅ யானை மதந்தப வொற்றி
உராஅ வீர்க்கு முட்குவரு நீத்தங்"
—அகம் 18

"கருங்கற் கான்யாற்று அருஞ்சுழி வழங்குங்
கராஅம் பேணாய் இரவரின்"
—நற்றிணை 292

"தாட்படு சின்னீர்க் களிறட்டு வீழ்க்கு
மீர்ப்புடைக் கராஅத் தன்ன வென்னை"
—புறம் 104

"கராஅங் கலித்த கண்ணகன் பொய்கை"
—பட்டினப்பாலை 242

முதலையினத்தில் இடங்கரும் கராமும் எவையென்று அறிய வேண்டும். கராம் என்பது வடநாட்டில் கங்கை ஆற்றில் காணப்படும் ஒருவகை முதலை யென்று தெரிகின்றது. இந்த முதலையைக் 'கரியால்' (Gharial) என்று வடநாட்டில் அழைக்கின் றனர். இதனுடைய ஆணிற்கு உள்ள நீண்ட கூர்ந்த வாயின் மேல் பூண்போன்ற பாகம் உள்ளது. இதைக் 'கரா' என்று அழைப்பர். இதனால் கரியால் என்று பெயர் பெற்றது. தமி ழில் வரும் கராம் என்ற பெயரும் வடநாட்டுப் பெயரிலிருந்து வந்ததாகத் தெரிகின்றது. இந்த முதலை வகையைத் தமிழ் நாட்டில் இயற்கையில் காண முடியாது. சங்ககாலத்தில் இந்தவகை முதலையை வடநாட்டிலிருந்து கொண்டுவந்து அக ழிகளில் விட்டு வளர்த்திருக்கலாம் பின்னர் சங்ககாலத்தி லேயே ஆறுகளிலும் பரவியிருக்கலாம். இந்த முதலையைக் கண்டு வடநாட்டிலும் மக்கள் பெரிதும் அஞ்சுவர். இந்தக் கராம் என்ற முதலை மீன்களையே தின்னுமென்றும், மற்ற விலங்குகளையும் மனிதரையும் அணுகாது என்றும் ஆராய்ச்சி

யாளர் கண்டு கூறியுள்ளனர். இடங்கர் என்பது முதலையினும் சிறிய முதலைவகையாகும். தென்னாட்டிலும் வடநாட்டிலும் காணப்படுகின்றது. பெரும்பாலும் சிறிய ஆறுகளிலும் குளங்களிலும் சதுப்பு நிலங்களிலும் காணப்படும் இது மீன்களையும் சிறிய பறவைகளையும் விலங்குகளையும் தின்று வாழும். இடங்கர் 12 அடி வளரும், கழிமுகத்தில் வாழும் கொடிய முதலை 30 அடி வரை வளரும். இடங்கர் என்ற முதலை கொடுமை வாய்ந்ததன்று. இதனை மலையாளத்தில் மண்ணன் என்றழைக்கின்றனர்.

இடங்கர், கராம் ஆகியவைபற்றி ஒரு செய்தி சங்கநூல்களில் வருகின்றது. யானையைப் பிடித்து இழுப்பதாகக் கூறிய செய்தி ஆராய்தற்குரியது. களிறை இழுத்து மறைக்கும் இடங்கர் என்றும், களிறைக் கொன்று வீழ்த்தி ஈர்த்துச் செல்லும் என்றும் சொல்லப்பட்டுள்ளது. இச் செய்தி கற்பனையானது என்று கருதவேண்டும். ஆண் யானையை இழுத்துச் சென்று கொல்லும் சக்தி முதலைக்கில்லை. இச்செய்தி கராத்திற்குப் புறநானூற்றிலும் அகநானூற்றிலும் கூறப்பட்டிருப்பதால் இது வடநாட்டிலிருந்து வந்த புராணச் செய்தியாக இருக்கலாம். இந்தக் கற்பனைச் செய்தியையே பிற்காலத்தில் முதலை இழுத்த யானை ஆதிமூலமே என்று கதறித் தப்பித்த புராணக் கதையாக மாற்றியிருக்கலாம். மலைப்பாம்பு யானையை விழுங்கினதாகச் சங்க நூல்களில் வரும் கற்பனைச் செய்தியைப் போன்றதே இதுவும். கராமும், இடங்கரும் மனிதரைக் கொல்லும் சக்தி உடையன அல்ல. முதலை யொன்றே மனிதரைக் கொல்லும். ஆனால், இந்த முதலையும் யானையைக் கொல்லக்கூடியதன்று. அகழியில் இருந்த முதலை இரவில் விளக்கு வெளிச்சத்தில் கண்ட மனிதரின் நிழலையும் கவ்வப் பார்க்கும் என்று புறநானூற்றுப் பாடல் கூறுவதைக் காணலாம். சங்ககாலத்தில் இந்த மூன்று வகை முதலைகளையும் கோட்டை அகழிகளில் பாதுகாப்புக்காக வளர்த்தனர் என்று தெரிகின்றது. முதலையை Crocedilus porosus (estuarine crocodile) என்றும் இடங்கரை Crocodllue palustris (Marsh crocodile) என்றும் கராத்தை Gavialis gangetics என்றும் அழைப்பர்.

———

உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா வாதியு மந்தமு மாயினும்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே.

—சுந்தரர்-தேவாரம்

இறைவிப்பித்தன் காவியம்

அல்லது

அபிராமிபட்டர் புராணம்

[ஆசிரியர் ‘அடியன் மணிவாசகன்’]

ஓம்

பிள்ளையார் காப்பு

(நேரிசை வெண்பா)

தலைப்பிள்ளை நீயென்று தான்பணிந்தேன் யாரும்
தலைக்குட்டுப் போடும் தகையால்—கலைக்கொம்போய்
ஆத்தாள் அபிராமி அன்பனையான் நூல்செய்யக்
காத்தாள் வதுமுன் கடன்.

அபிராமி வணக்கம்

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

எழுதறியாக் கைப்பிடித்தே எழுது கோலை
எடுத்தளித்துச் சுழிகாட்டும் என்றன் தேவி
உழுதறியா உளத்தரிசை உழுது கண்கள்
உகுநீரைத் தேக்கியதில் காதல் வித்தி,
பழுதறியா வழிபாட்டால் பித்த ளுகிப்
பாவிளைத்த அபிராமிப் பட்டன் வாழ்வை
எழுதென்ற அருளொன்ருல் எழுது கின்றேன்
என்வணக்கம் அவளடிக்கே கோடி யம்மா !

க. பாயிரம்

1. மண்பிறந்த செடிகொடியில் மணத்தைக் கண்டேன்
மாவிலங்குக் கூட்டினிலும் கொள்கை கண்டேன்
விண்பிறந்த மழையினிலே தூய்மை கண்டேன்
வீசுகின்ற காற்றினிலே ஊக்கங் கண்டேன்
பண்பிறந்த தமிழினிலே உயிரைக் கண்டேன்
பார்சுழலும் கதிர்களிலே ஒழுக்கங் கண்டேன்
புண்பிறந்த மனிதனிலே என்ன கண்டேன் ?
போகின்றேன் போகின்றேன் எங்கோ எங்கோ !

2. பிறப்பதுதான் எற்றுக்கோ இந்த வையம் ?
பிழைப்பதுதான் எற்றுக்கோ சூழ்ச்சி செய்தே
சிறப்பதுதான் எற்றுக்கோ கல்வி கற்றும்
செழிப்பதுதான் எற்றுக்கோ இன்பம் பெற்றும்

கறப்பதுதான் எற்றுக்கோ நெஞ்சை யெல்லாம்
கனிவதுதான் எற்றுக்கோ முகங்கள் எல்லாம்
உறப்பதுதான் எற்றுக்கோ எண்ண மெல்லாம்
ஒடுகிறேன் ஒடுகிறேன் எங்கோ எங்கோ !

3. நாயாகப் பிறக்கவில்லை இழிவு செய்ய
நச்சாகப் பிறக்கவில்லை இறப்புச் செய்ய ;
பேயாகப் பிறக்கவில்லை கொலைகள் செய்யப்
பெருவிலங்காய்ப் பிறக்கவில்லை காமம் செய்ய ;
காயாகப் பிறக்கவில்லை கைப்புச் செய்யக்
கனலாகப் பிறக்கவில்லை எரிப்புச் செய்ய ;
சேயாகப் பிறந்தேன்டா மனிதா! நானும்
சேர்ந்தேனே சேர்ந்தேனே அங்கே அங்கே !

4. திடலானல் முளைப்பதெது நெஞ்சில் எண்ணம்
தீயானல் முளைப்பதெது வாழ்வில் முள்ளின்
படலானல் முளைப்பதெது வழியில் தீய
பாவானல் முளைப்பதெது நாட்டில் ஒவ்வா
மடலானல் முளைப்பதெது பூவில் அந்தோ !
மாதெய்வம் முளைப்பதெங்கு நெஞ்சம் அன்புக்
கடலானல் முளைப்பதுதான் இறைவி! காலைக்
கதிரொளியில் முளைப்பதருள் கண்டேன் கண்டேன்.

5. ஒளிதோன்றும் இடமெல்லாம் அவளே வைய
உயிர்தோன்றும் உடம்பெல்லாம் அவளே நெஞ்ச
அளிதோன்றும் பொலிவெல்லாம் அவளே உய்ய
அருள்தோன்றும் ஆறெல்லாம் அவளே கற்புக்
களிதோன்றும் முகமெல்லாம் அவளே காதற்
கவின்தோன்றும் அகமெல்லாம் அவளே கண்ணில்
துளிதோன்றும் பொழுதெல்லாம் அவளே கண்டேன்
துயர்தோன்ரு உலகத்தில் தெய்வங் கண்டேன்.

6. ஒடிப்பா எழுதியவன் ஒயும் கொள்கை
ஒளித்துப்பா எழுதியவன் சாயும் தீமை
சாடிப்பா எழுதியவன் நிலையும்! நன்மை
சாகப்பா எழுதியவன் அலையும் துன்பில்
வாடிப்பா எழுதியவன் தாழும் நாடு
வாழப்பா எழுதியவன் வாழும் ! தெய்வம்
நாடிப்பா எழுதியவன் மன்னும் ; தேவி
நயக்கப்பா எழுதியவன் தின்னும் இன்பே !

7. எத்தனுக்கோர் எத்தனில்லை இறைவிப் பித்தன்
இரங்குமுள வாய்மைநெறி உறையும் பித்தன்
அத்தனுக்கோர் அணிசூட்டும் அடிமைப் பித்தன்
அருங்கல்லைக் குழைக்குமருள் பாட்டுப் பித்தன்
வித்தினுக்கோர் வித்தாவாள் விழையும் பித்தன்
வியன்சிலம்பை நெஞ்சுயர்த்த 'பட்டன்' பித்தன்!
முத்தினுக்கோர் சுடர்கூட்டும் பெண்மைப் பித்தன்
முன்னியவன் பாப்புனைவேன் யானும் பித்தே!

8. கலகஞ்செய் மாந்தர்களே! ஒன்று கேட்பீர்
காலமெலாம் உண்டுடுத்துச் சாதல் வேண்டா
உலகஞ்செய் தெய்வநெறி செல்வீர்! அங்கே
உயர்ந்தோரின் பண்புகளைப் பாரீர் அன்பு
நலங்கனிந்த அருளொளியைத் தேறீர் வீட்டு
நட்பினிலே திளைத்திடுவீர் இன்பம் இன்பம்!
புலங்கரையாய் அறிவுயர்த்திப் பிறவி போற்றிப்
புத்தமுதத் தமிழோதி முறையே வாழி!

9. கான்மணந்த தேனுலகை வாழ வைக்கும்
காதலிலா உயிருலகை வீழ வைக்கும்
வான்மணந்த மீன்களெலாம் உண்மை வைக்கும்
வாழ்வகையை அறிவாளர் உள்ளம் வைக்கும்
பான்மணந்த சுவையுயர்வைத் தமிழ்தான் வைக்கும்
பழம்மணந்த இனிமைகளைக் குழந்தை வைக்கும்
நான்மணந்த பெண்தெய்வம் வாழ வைப்பாள்
நம்பிக்கை வழிபாட்டால் தெம்பு வைத்தாள்!

உ. தமிழ் நாடு

10. காடெல்லாம் சந்தனநற் காடா கும்மோ
கவினெல்லாம் தாமரையின் கவினு கும்மோ
ஏடெல்லாம் செந்தமிழ ஏடா கும்மோ
எழுத்தெல்லாம் தமிழொலியாம் எழுத்தா கும்மோ
பாடெல்லாம் உழவர்படும் பாடா கும்மோ
பண்பெல்லாம் தமிழர்தரும் பண்பா கும்மோ
நாடெல்லாம் தமிழுயரும் நாடா கும்மோ
நட்பெல்லாம் அருளுலக நட்பா கும்மோ?

11. மலைகளிலே தமிழ்ப்பொதிகை சிறந்த நாடு
மாவியலாம் அகம்புறத்தைப் படைத்த நாடு
கலைகளிலே ஆடலுரு செதுக்கும் நாடு
கற்பினுக்கோர் காற்சிலம்பை வணங்கும் நாடு

குலைத்தமிழிற் கூத்திசைகள் கனியும் நாடு
குமரியுந்தான் பாப்புனைந்தே அணியும் நாடு
விலையுயரும் முத்துக்கள் குளிக்கும் நாடு
விரைப்பொருட்கள் கலைப்பொருட்கள் அளிக்கும் நாடு.

12. கூற்றத்தைக் கண்டஞ்சா மறவர் நாடே
குற்றத்தை வருமுன்னே காக்கும் நாடே
ஏற்றத்தைக் கண்டுலகிற் போற்றும் நாடே
எக்களிப்பை வெறுத்தொழித்து வாழும் நாடே
சீற்றத்தை யெவருக்கும் செய்யா நாடே
சீரெல்லாம் வந்தடையச் செய்யும் நாடே
மாற்றத்தை விரும்பாத கொள்கை நாடே
மன்னுபுகழ் விளைக்கின்ற தமிழர் நாடு.

13. பாரில்வளர் உளமெல்லாம் கோவி லென்றும்
பரமனதில் வாழ்கின்றான் காண்பீர் என்றும்
ஏரில்வளர் உணவெல்லாம் பொதுமை யென்றும்
எல்லோரும் இன்புற்றே வாழ்க வென்றும்
சீரில்வளர் புகழெல்லாம் செய்க வென்றும்
செப்பிவளர் புலவோர்கள் நாளும் நாளும்
போரில்வளர் காளைகள்போல் தமிழைக் காக்கும்
பொறுப்பில்வளர் கடமையிலே உயரும் நாடு!

14. நாவினிக்கச் செய்யுமொழி உடல மெங்கும்
நரம்பினிக்கச் செய்யுமொழி மங்கை யெங்கும்
பூவினிக்கச் செய்யுமொழி பாணர் எங்கும்
புகழினிக்கச் செய்யுமொழி வையம் எங்கும்
கோவினிக்கச் செய்யுமொழி உயிரி லெங்கும்
குளிரினிக்கச் செய்யுமொழி நெஞ்சி லெங்கும்
பாவினிக்கச் செய்யுமொழி தமிழை யீன்ற
பழங்குமரிக் கண்டத்தைப் பேசும் நாடே!

15. குறைகண்டு சிவன்முன்னே சீறி வாழ்ந்த
கோதில்லா நக்கீரன்; மதுரை சோர்ந்த
இறைகண்டு கற்புத்தீ கொளுத்திச் சென்ற
ஈடில்லாக் கண்ணகியாள்; உலக மாகி
மறைகண்டு மன்னுயிரைக் காத்த அண்ணல்
வள்ளுவனார்; மொழியியலும் வாழ்க்கை நெஞ்சத்
துறைகண்டு தொல்தமிழ்க்குப் புகழைச் சேர்த்த
தோலாத காப்பியனார் பிறந்த நாடே.

(தொடரும்)

எழுத்தும் கருத்தும்

[பேராசிரியர் லெப்டினன்ட் கர்னல் சு. மகாதேவன், பி.எசி., எம்.ஏ.]

கருத்து வளர்ச்சிக்கேற்பவே எழுத்து வளர்ச்சி இருக்கும் என்பதை நாம் அறிவோம் இருந்தாலும் மக்கள் கையாண்டு வந்த எழுத்துருவங்களில் கருத்து வளர்ச்சியைத் தடுக்கும் சில களைகள் முளைத்ததைக் கண்ட அறிஞர்கள் அவற்றை நீக்கி அவ்வப்பொழுது எழுத்துருவங்களைத் திருத்தி இருக்கின்றனர். இன்று நாம் கையாண்டு வரும் உருவுதிரிந்த உயிர் மெய் வடிவங்கள் எந்த அளவிற்கு நம் கருத்து வளர்ச்சியைத் தடுத்து வருகின்றன என்பதை எண்ணிப் பார்ப்பதும் நம் கடமையாகின்றது!

எழுத்தும் சாரியையும்

இன்றைய நம் தமிழ் எழுத்து வடிவங்களில் மொழிப் பொருள்களுக்குத் துணை செய்யாத சாரியையினையும், மொழிப் பொருளுக்கு முதற்காரணமாக இருக்கின்ற எழுத்தொலி யினையும் வேறுபடுத்திக்காட்ட வழி இல்லாத ஒருநிலை இருந்து வருகின்றது! 'வல்லெழுத்தென்ப கசடதபற' என்றும், 'மெல்லெழுத்தென்ப ஙஞணநமன' என்றும், 'இடை எழுத் தென்ப யரலவழள' என்றும் மெய்யெழுத்துகளை அகரச் சாரியை கொடுத்து ஒலிப்பதை நம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது. ஆனால், ககர, அகர, லகர எழுத்தொலிகள் இணைந்து வரும் சொல்லின் வடிவத்தைக் 'கல்' என்று எழுதி முதலிலுள்ள ககரத்திலேயே அகரமும் அடங்கிவிட்டது என்று பேசும்போது அடங்கியுள்ள அந்த அகரம் சாரியையா, அல்லது எழுத்தொலியா என்ற கேள்வி எழத்தானே செய்யும்? சாரியை யினையும் எழுத்தொலியையும் ஒன்றாகக் குழப்பிக் கொள்ளுதல் ஓர் அடிப்படைத் தவறாகும்.

நேற்று முளைத்த ஆங்கிலம் கூட P என்ற மெய்யினை இகரச் சாரியை சேர்த்து 'பி' என ஒலித்தாலும் இகர எழுத் தொலியோடு வரும் இடங்களில் Pt என்று எழுதாமல் Pit என்றே எழுதுகின்றது. அவ்வாறே 'க'கர ஒலியைக் குறிக்கும் K என்ற எழுத்தை எகரச் சாரியை சேர்த்து 'கெ' என ஒலித்தாலும் எகர எழுத்தொலி வரும் இடங்களில் Kttle என்று எழுதாமல் Kettle என்றே எழுதுகின்றது.

நாமும் ககர ஆகாரத்தைக் 'கா' என்று கால்வாங்கி எழுதுவதுபோல் ககர அகரத்தை (T) போன்ற அடையாளம் சேர்த்து, 'கT' என்று எழுத முற்பட்டிருந்தால் ககர மெய்யைக்

குறிப்பதற்குத் தலைப்புள்ளி இல்லாமலேயே 'க' என எழுதும் நல்ல நிலை ஏற்பட்டிருக்கும். காந்தன் என்ற சொல்லை, 'காநாதனெ' என்றும், வந்தான் என்ற சொல்லை 'வநதான' என்றும் புள்ளியில்லாமல் எளிமையாக எழுதலாம்! தமிழர்கள் அதனைச் செய்யத் தவறியதால் ஓலையில் எழுதும் நாளில் எழுத்துக் குழப்பம் நிலவியதோடு, இன்று அச்சும் தட்டச்சும் வந்துவிட்ட காலத்திலும் புள்ளி வைத்த மெய் வடிவமா, புள்ளி இல்லா மெய் வடிவமா என்ற குழப்பம் நீடித்தபடி இருக்கின்றது.

அகரத்தைக் காணாமல் அகரத்தை ஒலிப்பதா?

இன்று தமிழர்களின் பேச்சும் மூச்சும் தமிழாக இருப்பது என்னவோ உண்மை. ஆனால், தமிழை எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் தொகைதான் 100க்கு 30 பேராக அருகிக் கிடக்கின்றது: ஏனைய 70 விழுக்காட்டினர் கைவிரலை மையில் ஒற்றிக் காகிதத்திலே புரட்டிக் கொண்டிருக்கின்றனர். அந்த அளவிற்கு இன்று நாம் கையாளும் உருவு திரிந்த எழுத்துருவங்கள் சிக்கலாகவும், மொழியியலுக்கு முற்றிலும் புறம்பானதாகவும் வளர்ச்சியற்றுக் கிடக்கின்றன! அவ்வளவு ஏன்? எழுதப்படிக்கத் தெரிந்தவர்களுக்கும் மொழியியல் உணர்வூட்ட நம் திரிபெழுத்துக்கள் தவறிவிட்டன என்பதை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம்! 'மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே' என்றும், 'இரு வயின் பெயரொடும் ஒற்று முன்னாய் வரும்' என்றும் இலக்கண ஆசிரியர்கள் தெளிவாகச் சுட்டிச் சென்றிருந்தும் 'உயிர் மெய்கள்' உண்மையில் 'மெய் யுயிர்களே' என்ற மொழியியல் உணர்வு நமக்கு ஏனோ மங்கி விட்டது! அதனாலேயே இன்று மெய் வடிவத்திற்கு முன்னால் உயிர் ஒலியை உணர்த்தும் கொம்புகளையும் (கெ, கே) இணைக் கொம்புகளையும் (கை) எழுதும் பிழை நெறியைத் தொடர்ந்து மேற்கொள்வதில் பிடிவாதம் பிடித்து வருகின்றோம்!

வரி வடிவம் வழி மறைக்கின்றதே!

பேசுதலைக் கேட்டுணர்வது மொழி என்ற நிலை மாறி இன்று எழுதுவதைப் படித்துணர்வதே மொழி என்ற ஒரு தவிர்க்கமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது! காதால் கேட்கும் போது தழல் என்ற சொல்லில் அழல் ஒலிப்பதையும், தாய் என்ற சொல்லில் ஆய் இருப்பதையும் குழந்தைகளால் உணர முடிகின்றது. இருந்தாலும் வரி வடிவத்தில் தழலைக் காணும் போது அகரத்தையோ அழலையோ காண முடிவதில்லை; தாயைக் காணும்போது ஆகாரத்தையோ ஆயையோ காண முடிவதில்லை!

இந்நிலையில் கற்றுணர்ந்த நாமோ, ‘தோடு’ என்பதில் ‘ஓடு’ உள்ளது என்ற மொழியியல் அறிவு பெற முடியாத நிலையில் கேரளத் தமிழ் ஓடையைத் ‘தோடு’ என்று வழங்கி வருவதைக் கண்டிருந்தும் ‘இரு ஓடை’ என்று பொருள்படும் ‘ஈரோடு’ என்ற பெயரினை ஈர்ந்த (மண்டை) ஓடாகக் கொண்டு ‘அர்த கபாலம்’ என்று மொழிபெயர்த்துவிட்டோம்! ஏன்? நாம் உச்சி மேல் வைத்துப் போற்றும் நச்சினார்க்கினியாரும் கூட, ‘தொன்று’ என்பதில் ‘ஒன்று’ காண முடியாதவராகப் பாண்டியன் ‘ஒருமொழி’ வைத்து உலகாண்ட செய்தியைத்,

> ‘தொன்று மொழிந்து தொழில் கேட்ப
> வெற்றமொடு வெறுத் தொழுகிய’

என்று புகழ்ந்து பேசும் மதுரைக்காஞ்சியின் தொடருக்கு,

> ‘வேந்தரெல்லாம் தம் பழமையைச் சொல்லி ஏவல்
> கேட்கும்படி வெற்றியோடே செறிந்து நடந்த’

என்று பொருள் செய்துவிட்டார். பாவம், தொன்று மொழிதல் என்பதற்கு ஒன்று மொழிதல் எனக் கொண்டு ஆணை பிறப்பித்துப் பகைவர்களை ஏவல் கேட்கச் செய்து வெற்றி யோடே........நடந்த என்று பொருள்கொள்ளத் தவறி விட்டார். இன்று ஒவ்வொரு என்ற பொருளில், ‘நவில் தொறும் நூல் நயம்போலும்’ என வழங்கும் ‘தொறு’ என்ற சொல்லும் (அதன் நீட்சி ‘தோறு’ என்பதாகும்) தொன்று என்பதன் இடைக்குறையே என்பதையும் உணராத நிலையில் இன்றைய மொழியியல் உலகம் உள்ளது! ஐயீற்றுடைக் குற்றுகரத்திற்கு எடுத்துக்காட்டுத் தேடும் உரையாசிரியர்களும் ஒற்றையையும், இரட்டையையும் பிடித்துக் கொண்டு தொங்கு கிறார்களே தவிரச் சற்று ஓடைப்பக்கம் சென்று திரும்புவதில்லை! ஆம், மொழியியல் உணர்வை நமக்கு ஊட்டுவதற்கு இடை நாளில் பனையோலையும் இரும்பாணியும் உருவாக்கிய கொம்பு, கால், புள்ளி, கீழ்மேல் விலங்குகளுடன் கூடிய நம் எழுத்துருவ முறை பயன்படாது என்பது உறுதி!

> “எழுத்தெனப் படுப
> அகரமுதல் னகர இறுவாய்
> முப்பஃதென்ப’

என்ற தமிழ் நெறி நின்று உயிரும் உடம்புமான முப்பது முதல் எழுத்துருவங்களை மட்டுமே கொண்டு (ஆய்தப் புள்ளியையும் சேர்த்துக் கொள்ளலாம்!; மெய் எழுத்துருவங்களுக்குப் புள்ளியும் வேண்டுவதில்லை) தஅழல—அழல என்றும் தஆய> ஆய என்றும், தஓடஉ> ஓடஉ என்றும், தஒனறஉ> ஒனறஉ

>ஒறஉ (கன்னடம்) என்றும் விளக்க அறிஞருலகம் முன்வருதல் வேண்டும். அப்பொழுதுதான் இளைஞர்க்குச் சொற்பிறப்பியல் அறிவும் சுடர்விடும்!

இலக்கணம் எங்கே?

இன்று 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்' என்ற கருத்தை விளக்கக் கரும்பலகைக்குச் செல்லும் தமிழாசிரியர், சுக்கு+அரிது > சுக்கரிது என்று எழுதி மாணவரின் கண்களில் ஓடுகின்ற உகரத்தையும் காட்ட முடியாதவராய், வருகின்ற அகரத்தையும் காட்ட முடியாதவராய் இருக்கையில் வந்தமர்ந்து விடுகின்றார். எழுத்துகளை உருவு திரிப்பதை விடுத்து

சஉககஉ+அரஇதஉ > சஉககஅரஇதஉ

என்று எழுதி விளக்கினால் அன்றோ இலக்கணம் சிறக்கும்? காதால் கேட்பதற்குத் தான் பேசுவது; அதேபோல் கண்ணால் காண்பதற்குத்தான் எழுதுவது! ஆம், 'சுக்கு' என்பதில் காதில் படும் உகரங்கள் கண்ணுக்கும் படவேண்டும். அவ்வாறே சுக்கரிது என்பதில் உள்ள அகரமும் கண்ணிற்குத் தோன்ற வேண்டும்!

மொழியியல் முகிழ்க்குமோ?

தமிழில் 'அவர்' என்பது தெலுங்கில் 'வாரு' என்றும் 'இலது' என்பது 'லேது' என்றும் உருமாறி வழங்குவதை உருத்திரியாத எழுத்து வடிவினை மேற்கொள்ளும் அறிஞர் கால்டுவெல் அவர்கள், மிகவும் எளிதாக

avar—avaru—vaaru—varu

எனவும்,

elathul—aethu—lethu

எனவும், உயிர் இடம் பெயர்ந்து நீண்டொலிக்கும் மொழி யியல் உண்மையினை முட்டின்றி விளக்குகின்றார். நாமோ, கால்டுவெல் ஆங்கில எழுத்தில் விளக்கும் அதே உண்மையினை அவர்>வாரு என்றும், இலது>லேது என்றும் எழுதி மொழி யியல் மாற்ற நிலைகளைப் படிப்படியாக விளக்க வழியில்லாது அமைந்து விடுகின்றோம்! நாமும், உருவு திரிந்த எழுத்துரு வங்களை விடுத்து உயிர் முதல், மெய்முதல், உயிரீறு, மெய்யீறு என்று பேசும் இலக்கண ஆசிரியர் நெறி நின்று

அவஅர > அவஅரஉ > வஅஅரஉ > வஆரஉ

எனவும்,

இலஅதஉ >ல்அஇதஉ >லஏதஉ

எனவும் விளக்குவது தானே அறமும் அறிவுடைமையும் ஆகும்? மெய் அப்பனும், உயிர் அம்மையும் ஒலியன்பால் ஒன்றி அம்மையப்பராகி நம் எதிர்காலச் செல்வங்களுக்கு ஞானப்பால் ஊட்டட்டும். அவர்கள் உருவுதிரிந்து அர்தநாரீசுரராகித் தமிழர்களில் நூற்றுக்கு எழுபது பேரை இனியும் எழுத்துலகத்திற்கு வெளியே நிறுத்தி வைத்திருக்க வேண்டா !

முகவரிக் குழப்பமும் தெளியும் !

'உயிரும் உடம்புமாம் முப்பது முதலே'

என்று கொண்ட தமிழ் மரபை மேற்கௌ்வதனை மறுத்து முதல் எழுத்துகளில் எழுதுவது ஆங்கிலத்தின் தனியுடைமை என்று பேச எவரே முன்வருவார்? இன்று கொம்புகால் புள்ளி கீழ் மேல் விலங்குகளை நம்பி எழுத்துகளை இணைத்துத் திரித்து எழுதும்போது கோவலன் கேவலன் ஆவதையும், கோட்டை கேட்டை ஆவதையும் கண்ணால் கண்டு நகைச்சுவையாகப் பாராட்டி வருகின்றோம்! 'கோவலன் கோட்டை, சென்னை-9' என்ற முகவரியை, 'கஓவஅலஅன, கஓடடஐ, சஎனனஐ-9' என்று எழுதத் தொடங்கினால் இக்குழப்பம் அறவே நீங்கிவிடும் !

ஆவியுலகத் தொடர்பாளரும் வரவேற்பார்கள் !

நம்மிடையே வாழ்ந்து மறைந்தவர்களின் கருத்தினை ஆவியுலகுடன் தொடர்பு கொண்டு அறிய முன்வரும் அன்பர்களும் நம் உருவு திரிந்த எழுத்துருவங்களை நம்பிச் செயலில் இறங்குவதில்லை! அவர்கள் 40க்கு, 40 செ. மீ. அளவுள்ள ஒரு சதுரப் பலகையின் நான்கு விளிம்புகளிலும் சட்டம் அடித்து உட்புறம் நான்கு ஓரங்களில் A, B, C, D............Z என்ற 26 ஆங்கில எழுத்துகளைச் சம அளவிட்டு எழுதிக்கொண்டு 5 செ. மீ. குறுக்களவுள்ள வழவழப்பான ஒரு வட்ட மரத்துண்டை அதன் நடுவில் வைத்து அதன் மேல் தம் கைவிரலை வைத்து அழுத்தி 'தமிழ் வாழும்' என்ற செய்தியைக் குறிக்க முறையே 'T-A-M-I-L V-A-L-U-M' என்ற எழுத்துகளை நோக்கி அந்தத் துண்டினை நகர வாய்ப்பளிக்கின்றனர். 'எங்கும் தமிழ்' 'எதிலும் தமிழ்' என்று நம் தமிழக அரசு தமிழ் வளர்ச்சி இயக்கம் தொடங்கி அரும் பாடுபடும் இந்த நேரத்தில் ஆவியுலகத் தொடர்புக்கு மட்டும் விதி விலக்காக ஆங்கில எழுத்துகளை இனியும் தொடர்ந்து அனுமதிக்க முடியுமா? ஆவியுடன் பேசும் 'மீடியங்கள்' 'எழுத்துகள் முப்பதே' என்ற நம் தமிழ்மரபின் வழிநின்று தங்கள் பூசைப்பலகையில் உயிர்

வடிவம் பன்னிரண்டையும், மெய் வடிவம் பதினெட்டையும் மட்டும் பயன்படுத்தி வட்டத் தட்டில் கைவிரலை வைத்து அழுத்தினால் 'TAMIL VALUM' என்று ஆங்கில எழுத்துகள் தரும் அதே செய்தியை 'தஅமஇழ வஆழஉம' என்று தமிழ் எழுத்துகளே தந்துவிடுமே!

புலவர் குழு வழிகாட்டுகின்றது:

இன்று நம் நல்வினை காரணமாகத் தமிழ்ப் புலவர் குழு தந்தை பெரியார் பின்பற்றிவந்த 'விடுதலை' எழுத்து வடிவங்களை ஏற்பதுடன், உகர, ஊகார உயிர் மெய்களையும் ஜ ுரம், ஜ ூலை என்பதுபோலப் பிரித்தெழுதுவது என முடிவு செய்துள்ளது. இனிமேல் தமிழுலகம்,

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு

என்ற பொய்யாமொழியைச்

சிறப்பொட ு ப ூசனை செல்லாத ு வானம்
வறக்க ுமேல் வானோர்க்க ும் ஈண்ட ு

என எழுதும். ஆம், எதிர்காலத்தில் நம் குழந்தைகள்

சஇறஅபபஒடஉ பஊசஅனஐ சஎலலஆதஉ வஆனஅம்
வஅறஅககஉமஏல வஆனஓர ககஉம ஈண்டஉ

எனக் கொம்புகால் புள்ளி மேல் கீழ் விலங்குகள் இல்லாமல் முத்துக்கோத்தது போல் எழுதுவதற்கும், தட்டச்சு செய்வதற்கும் இது வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆசிரியர் குறிப்பு

இக் கட்டுரையின் ஆசிரியர் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் திரு கொண்டல் சு. மகாதேவன் அவர்களின் பேச்சும் மூச்சும் அவர்கள் தம் கருத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்பதே யாகும். முன்னமே இவர்கள் கருத்தை ஒட்டி எழுதப் பெற்ற கட்டுரைகள் செல்வியில் வெளியிடப் பெற்றிருக்கின்றன. தமிழ்நாடு தொழில் நுட்பக் கல்வித்துறை இயக்குநர் மதிப்பிற்குரிய டாக்டர் வா. செ. குழந்தைசாமி, பி. இ. அவர்கள் அறிவியல் நூல்களைத் தமிழில் கொண்டுவருவதற்குத் தமிழில் ஒரு சில எழுத்துச் சீர்திருத்தம் கட்டாயம் வேண்டுமென்றும் அதற்கெனக் கருத்தரங்கம் ஒன்று நடத்த வேண்டுமென்றும் கூறினார்கள். பல துறைகளில் தமிழுக்குத் தொண்டு செய்ய விரும்பும் அறிஞர்கள் கூடி முடிவு செய்ய வேண்டியதொன்றாகும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகை யினானே."

தென்னையும் தொல்காப்பியமும்

[க. ப. அறவாணன், M.A., M.Litt.]

தொல்காப்பியரைப் பற்றி அண்மையில் வெளிவந்த நூலொன்று, தொல்காப்பியத்தின் காலம் சங்க இலக்கியங்களுக்குப் பிற்பட்ட காலமே என்று நிறுவுகிறது.[1] இக்கருத்தை அண்மையில் கிடைத்த ஒரு புதிய சான்று ஒன்றைக்கொண்டு மறுபார்வை செய்ய வைப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

தொல்காப்பியத்துள் இடம் பெற்றுள்ள மரங்களாவன :

அரை (எ. 284), ஆண் (எ. 305), ஆவிரை (எ. 284), ஆர் (எ. 364), ஆல் (எ. 376), இல்லம் (எ. 314), உதி (எ. 244), புளி (எ. 245), உன்னமரம் (பொ. 63), எகின் (எ. 337), ஒடு (எ. 263), குருந்து (எ. 417), கார் (எ. 364, 365), சோ (எ. 279), ஞெமை (எ. 283), குமிழ் (எ. 387), களா (எ. 230), நமை (எ. 283), தேக்கு (எ. 416), பலா (எ. 182), பனை (எ. 170, 284, 285, 286), பீர் (எ. 364, 366, 387), புளி (எ. 245, 246), புன்கு (எ. 417), பூல் (எ. 376), பிடா (எ. 230), மா (எ. 232), யா (எ. 230), விசை (எ. 283), விள (எ. 182, 218), வெதிர் (எ. 364), வேம்பு (பொ. 63, 417), வேய் (பொ. 61), வேல் (எ. 376) ஆக, தொல்காப்பியத்துள் முப்பத்து நான்கு மரங்களைப் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இப் பெரும் பட்டியலில் இன்று தமிழகம் முழுதும் பல்கிக் கிடக்கும் தென்னை மரம் இடம் பெருதது தனிப் பார்வைக் குரியது.

இன்று நாடெங்கும் காணப்பெறும் தென்னைமரம் தொல்காப்பியத்தில் இடம் பெருமற் போனதேன்? பனை என்ற மரத்தின் பெயர் பல வேறு வகைகளில் புணருமாற்றை நான்கு நூற்பாக்களில் எடுத்து விளக்குபவர், தென்னை மரத்தைக் குறிப்பிடாதது சிந்தனைக் குரியது. தென்னை என்பதன் பழம் பெயர், தெங்கு என்பதாகும். தெங்கு+காய் என்பதே தேங்காய் என்று அமைகிறது.

'தெங்கு நீண்டு ஈற்று உயிர்மெய் கெடும் காய்வரின்' என்று பவணந்தி, நன்னூல் நூற்பா அமைக்கிருர். பிற இலக்கண ஆசிரியர்களும், தேங்காய் என்பதன் புணர்ச்சியைச் சுட்டிக் காட்டுவர்.[2]

---

1. அருணசலம். ப. தொல்காப்பியர். 1975. ப. 26.
2. நன். 187, முத்துவீரியம், புணரியல் 238.

கருப்பொருள்களில் மரமும் ஒன்று, இன்றைய கடலோரப் பகுதியிலும், மருதநிலப் பகுதிகளிலும் செழிப்பாக விளையும் தென்னைமரம், நெய்தல் நிலக் கருப்பொருளாகவோ, மருத நிலக் கருப்பொருளாகவோ, மூல நூலாசிரியர்களாலோ, உரை யாசிரியர்களாலோ சுட்டப்படவில்லை.

பனங்கள்ளையும், ஈச்சங்கள்ளையும், நெல்லிலிருந்து வடிக் கப்பெறும் கள்ளையும் சுட்டிக் காட்டும் சங்க இலக்கியங்கள், தென்னங்கள்ளை எங்கும் குறிக்கவில்லை.

தென்னை மர நாடு என்று பொருள் விளக்கப் பெறும் 'கேரளம்' என்ற பெயர் கி. பி. மூன்றும் நூற்றாண்டிற்கு முன் வழங்கவில்லை.[1]

தென்னை மரங்கள் நிரம்ப விளையும் நாடுகளுள் ஒன்றான இலங்கையில் கி.பி. 589 இல் இரண்டாம் அகரபோதி அரசனால் தென்னை நடப்பட்டது என்ற செய்தியை மகாவம்சம் குறிப்பிடு கிறது. எனினும் இவனுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே தென்னிலங்கைப் பகுதியில் தென்னை பயிரிடப் பட்டது என்று ஆய்வாளர் அறிவிக்கின்றனர்.[2]

ஆக இவை எல்லாம் அறிவிக்கும் செய்தி என்ன? தென்னை, தமிழ்நாட்டு அல்லது இந்திய நாட்டுப் பயிர் அன்று என்பதைத்தான். கிறித்துவை ஒட்டிய சில நூற்றாண்டுகட்கு முன்பு தான் தென்னை இந்தியாவில் அறிமுகமாயிருக்கிறது.

தென்னையின் தோற்றம் பற்றி ஒருமித்த கருத்து அறிஞர் இடையே இல்லை எனினும், அண்மை ஆராய்ச்சியால், அஃது

---

1. கி. பி. 3 ஆம் நூற். அசோகன் கல்வெட்டுக் கேரளபுத்திரர் என்று குறிப்பிடுகிறது. இதுவே மிகப் பழம் சான்று.

2. Reginald child. Coconuts. 1964. P. 6. References in ancient literature to the coconut in Ceylon are scanty. The earliest recorded observation is possibly that of Megasthenes, the ambassador of Selucus Nicator to the Indian King Chantra-gupta about 300 B. C. There is mention in the ancient Chrolicle the Mahavamsa, of the planting of coconuts by Agrabodhi II. about A. D 589. This monarch is identified with the Kusta Raja whose statue, carved out of the solid rock, is to be seen near Weligama, in the south of island. He is supposed to have been the first to introduce coconut cultivation into Ceylon, and his legend is related with much romantia embroidery by B. Seemann in his Popular History of the Palms (1856). Probably the palms had been growing in South Ceylon for some centuries before his time, but the persistence of the legend may be taken to indicate a time when it had been unknown in Ceylon.

Reginald Child. P. 6

இந்தியப் பயிர் இல்லை என்பது உறுதி ஆகி இருக்கிறது. ரெஜினல்டு சைல்டு என்ற இலங்கை அறிஞரும், வாவிலோவ் என்ற உருசிய அறிஞரும், கண்டோல் என்ற ஆங்கில நாட்டு அறிஞரும், தென்னை இந்திய அல்லது இலங்கைப் பயிர் அன்று என்பதை நிறுவி இருக்கிறார்கள்.[1] ஆதலின், தென்னை, வெளிப்புலத்தினின்று தமிழ் நாட்டிற்கு வந்த மரமே ஆகும்.

இதனைச் சில கதைகளும் உறுதி செய்கின்றன. கடல் களுக்குக் கீழ் உள்ள நாகலோகம் என்னும் பரமானந்த கண்டத்திலிருந்து பத்தியுள்ள ஓர் அரசர் தம் பூசைக்காக இந்தியாவிற்குக் கொண்டுவந்ததாக ஒரு கதை வழங்குகிறது.[2] தம் போர்க் கருவி ஆகிய மழுவை வீசி எறிந்து, அது சென்ற தூரம் மேற்குக் கடலைப் பின்வாங்கச் செய்து, அங்கு நிலப் பாகத்தைப் பரசுராமர் படைத்தார், அதுதான் மலையாள நாடு. அப் பரசுராமரே தெய்வத் தருவாகிய தென்னையைக் கொண்டு வந்தார் என்று ஒரு கதை வழங்குகிறது.[3] சமற்கிருதத்தில் தென்னைக்குக் 'கற்பக தரு' என்று ஒரு பெயர் புழங்குகிறது.[4] அப் பெயர், தென்னையின் முழுப்பயனைக் காட்டுவது எனினும், தென்னை மரம், கற்பக தருவைப் போல, மண்ணுலக மரம் அன்று, விண்ணுலக மரம் என்பதையும் பெற வைக்கிறது. இக் கதைகள் எல்லாம் வலிமை வாய்ந்த சான்றுகள் அல்ல. எனினும், தென்னை மரம், இந்திய மண்ணினது அன்று என்ற உண்மையை இக் கதைகள் குறிப்பாகப் புலப்படுத்துகின்றன. இச் செய்தியைத் தென்னைமரம் பற்றிய இக்கால ஆராய்ச்சியும் வலிமைப் படுத்துகிறது.

பயிரியல் அறிஞரிடையே தென்னையின் தோற்றம் பற்றிக் கருத்து வேறுபாடு இருக்கிறது. எனினும் இந்திய மண்ணைப் பிறப்பிடமாகக் கொண்டது இல்லை என்பதில் தற்காலத்தில் ஒருமித்த கருத்தே நிலவுகிறது. மைய அமெரிக்காவிலுள்ள பனமா நில அடுக்கு அருகில் தோன்றியது என்பர் ஒரு சிலர்; பசிபிக் பெருங்கடலில் உள்ள பாலிநேசியாத் தீவுத் தொகுதியில் காணப்பட்டது என்பர் வேறு சிலர்; இந்துமாகடலில்

---

1. Vavilov. v. I. (1926) The origin, Variation immunity and breeding of cultivated plants—Cherenica Botanica 13(16) 1949-50.

De Condolle. A. 1884, Origin of cultivated plants—Kegan Paul Trah & Co. London.

2. ஜான். சி. எம். தென்னைச் சாகுபடி. 1953. ப. 2.

3. பாலகிருஷ்ணன். எம். ஆர். தென்னை. 1967; ப. 18.

4. இலட்சுமணன். கே. எஸ். தென்னைச் செல்வம், 1967. ப. 8.

உள்ள மலாயா, இந்தோனேசியா நாடுகளுக்கு அருகில் உள்ள தீவுகளில்தாம் தென்னை தோன்றியது என்பர் சிலர். அறிவியல் சான்றுகள், உய்த்துணர்தலைக் கொண்டு மலேயா நாட்டிலிருந்து பசிபிக் பெருங்கடலில் உள்ள தீவுத் தொகுதிகள் வரை தென்னை தன் வாழ்க்கையைத் தொடங்கியது என்று கூறலாம்.[1]

தென்னை உலகெங்கும் எவ்வாறு பரவியது? தேங்காய் நெற்றுகள், நீரிலே மிதக்கக் கூடியவை. பசிபிக் தீவுகளில் கடற்கரை ஓரமாகச் செழித்திருந்த தென்னை நெற்றுகள் முதிர்ந்து கடல்நீரில் உதிர்ந்து மிதந்திருத்தல் வேண்டும். கடல் அலை உந்தலால், காற்றின் போக்கிற்குத் தக, அந் நெற்றுகள், இலங்கை, இந்தியக் கடலோரங்களில் ஒதுங்கி, அழுகி அழிந்தன போக எஞ்சிய சில தாமே பயிராகி இருத்தல் வேண்டும். நாளடைவில் அவை பல்கிப் பல்கிப் பெருகி இருத்தல் வேண்டும்.

தென்னையின் தோற்றக் காலத்திலேயே அதன் பயன் பாட்டை மாந்தர் அறிந்திருத்தல் இயலாது. காலப் போக்கிலேயே அதன் சுவையை அறிந்திருத்தல் வேண்டும். சோப்புக் கண்டு பிடிக்கப்பட்ட பின்பே, தென்னைப் பயிர் விரிவாக உலகெங்கும் செய்யப்பட்டது. ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே, தென்னையின் விளைபொருள்கள் மனிதனுக்குப் பயன்பட்டன என்று ஆய்வால் தெளிவாகிறது.[2]

தெற்கிலிருந்து வந்தது என்ற கருத்தை 'தென்னை', 'தெங்கு' என்ற தமிழ்ப் பெயர்கள் உணர்த்துகின்றன. தமிழ்ப் பெயர்களே பிற இந்திய மொழிகளிலும் பரவியது என்று அறிஞர் கருதுவர்.[3] புன்கு>புங்கு, புங்கமரம் என்பனபோல தென் திசையினின்று வந்தது என்ற கருத்தினது தென்+கு> தெங்கு என்ற சொல் வழக்கு ஆகும். இளந் தேங்காயைக் குறிக்கும் 'இளநீர்' என்ற பெயர், நியுகினி என்ற பசிபிக் தீவின் பெயர்த் திரிபு என்பர்.[4] (நியு—தென்னை, கினி—நிற்பது. நியு>நியர்>நீர்) ஆக இவை யனைத்தும் தென்னையின் வரவை எடுத்துக்காட்டுவன.

---

1. பாலகிருஷ்ணன். எம். ஆர். தென்னை. 1967. ப. 17, 18.
2. மே. கா. நூ. 17.
3. Mayuranathan P. V. The original bonce of the Coconut I. Bombay Natural History Soc. 1938, 40. No 2, 174—82.
4. சாமி. பி. எல். இளநீர். செந்தமிழ்ச் செல்வி. பிப். 1974. ப. 324.

தென்னை எக்காலத்தில் இந்தியாவிற்கு வந்திருத்தல் கூடும்? மூவாயிரம் ஆண்டிற்கு முன்னுகத் தென்னை இந்தியாவிற்கு வந்திருத்தல் வேண்டும் என்று அறிஞர் கருதுகின்றனர். பழங்கால இந்தியப் பயணிகள் தென்னையை அக்காலத்தில் நுக்ஸ் இண்டிகா (Nux Indica) என்று குறித்தனராம்.[1] ஆதலால், தமிழகத்தில் தென்னையின் வரவு கி. மு. 1000 என்பது தெளிவாகிறது

தொல்காப்பியர் தம் காலத்தில் இருந்த மரங்களின் பெயர்களைப் பலவேறு இடங்களில் குறிக்கிறவர், தென்னையைக் குறிப்பிடாமை, அவர் காலத்தில் தென்னை, தமிழகத்திற்கு வரவில்லை என்பதை உணர்த்துகிறது. உணர்த்தவே, தென்னையின் வரவு அல்லது பயன்பாடு உணரப்படாத காலத்தில்—அஃதாவது கி. மு. 1000 இற்கு முன்பே தொல்காப்பியர் வாழ்ந்தவர் என்பது பெறப்படுகிறது.

கருப்பொருளிலும் தென்னை சுட்டப் படாமையும், சங்க அகப் பாக்களில் அழகான தெங்கமரம் குறிக்கப்படாமையும், தென்னங்கள் குறிப்பு எதுவும் இல்லாமையும், தொல்காப்பியம், தென்னைமர வரவிற்கு முன்பே இயற்றப்பட்டது என்பதை வற்புறுத்துகின்றன. பனைமரம் முதலானவை விரவி வழங்குவது போல, தென்னை சங்கப் பாக்களில் பரந்து பேசப் பெருமை,* சங்க இலக்கிய அகப்பாக்களின் பழைமையைக் காட்டுகிறது.

———

நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.
—மூதுரை

---

1. Reginald Child. Coconuts. P. 6.
பாலகிருஷ்ணன். எம். ஆர். தென்னை. ப 19

*பனைமரம் : பார்க்க : Pre Pallavan Tamil Index. P. 543.
தெங்கு—மிகச் சில இடங்களிலேயே வருதல் காண்க.
பதிற்றுப்பத்து 13-7 ; பட்டினப்பாலை 16 ; பெரும்பாணாற்றுப்படை 353, 364 ; பொருநராற்றுப்படை 208 ; புறநானூறு 29, 61. பனம்பூவை மாலையாகப் போற்றியவர், தென்னம்பூவையோ, பாளையையோ போற்றுமை, பழந்தமிழர் காலத்தில், தென்னை இல்லாமையை அறிவிக்கிறது.

அருள்மிகு வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள் இளமை வழிபாடு

[தி. சே. முருகதாச அடிகள்]

"செந்தமிழ்ச் செல்வி" தை - மாதஇதழ். சிலம்பு-சஅ, பரல்-சு இல் வந்துள்ள "இளமையிற் பாடும் இனிய நற்பேறு" என்ற தொடர்பில் சில செய்திகளை இதிற் காணலாம். அடிகள் வாக்காகவே அவை உள்ளன. தம் தந்தையாவார் செந்தி ஞயகம் பிள்ளை. அவர் நண்பர் சீதாராம நாய்க்கர் அடிகளாரின் ஆரும் அகவையிலேயே அவர்தந் தந்தை விண்ணவர்க்கு விருந்தினரானர். எனவே நாய்க்கர் தம் தொழிலான மாந்திரீக முறையில், கணபதி வழிபாட்டையும் மறையையும் கூறினர். உடன் இலக்குமி மறையையும் கூறினர் என்பதை அகச்சான்றுடன் அறிய அடுத்துள்ள கவிகள் காண்க.

"எற்சிசு வெனக்கொள் செந்திஞ யகவேட்கு
இனியசோ தரன்நிகர் உறவோன்
நற்சிறப் புறும்இல் லறத்தினன் சீதா
ராமஞ நவில்பெயர்க் குரவன்
பற்சில விழுந்து முளைத்திடும் இளமைப்
பருவநா ளையில் எனைப் பற்றிப்
பொற்சில மிசைஓர் கதையினை வரைந்த
போதகத்து உபாசனை புகன்றுன்.
என்னகா ரணமோ அதனுடன் சேர்த்தே
இலக்குமி மந்திர மொன்றும்
சொன்னன இரண்டும் செபித்(து)இரு வடிவில்
தூய்மலர் தளிரிலை பெய்து
கன்னலங் கட்டி நனைத்தபச் சரிசி
ஆதிய கவினுறப் படைத்திட்டு
உன்னலும் ஏன்ற அளவினிற் செய்தேன்
உம்பல்வந் துறுக்கல்ஆ தியவாம்.
கனவுகண் டுரைத்தேன்; நல்விதி காரன்
என்ஒருகவின்பெயர் கொடுத்தான்
தனதுபா சனைத்தே வாகிய முருகன்
சடாக்கரந் தன்னையும் பகர்ந்தான்
வினவிய பின்னர் அதனையெந் நாளும்
மிகத்தியா னஞ்செயத் துணிந்தேன்"

என்பதால் அறியலாம்.

இப்படி இளமையிலேயே முருகவழிபாட்டினை யேற்றதால் "முருகதாசர்" என்ற பெயரிட்டழைத்தனர். ஆகவே முன்னைய தவத் தொடர்புக்கேற்ப வழிபாட்டுமுறை அமைந்தது. புதுப் பாடல் கூறவும் வாய்ப்பேற்பட்டது. அப்படி "அமுதம் கடையும் நாள்" என்ற பாடல் பூமிகாத்தாள் திருமுன் வாய்ப்புக் கிட்டியது எட்டரை வயதிலாகும். இதனை,

"அந்நாள் வயதெட் டரையெனக்(கு) அங்கா
ரகன்திசை யுதித்த(து)அன் னவன்பால்

வந்ததாம் மீன இலக்கினத் தினுக்கு
  வாக்குடன் பாக்கியா திபனுய்
முந்தடற் றசம கேந்திரத் துற்ற
  முறைமையால் முனிவர்கோன் பயந்த
செந்தமிழ்க் கவிதை பாடிடும் இச்சை
  செனித்திடச் செய்தனன் மன்னே''

என்று முன்னைய தவத்தொடர்புடன், கோள்நிலையும் ஒத்தது என்று தமக்குள்ள சோதிடப் பயிற்சியையும் கூறி, மற்றைய கோள் இருப்பிடமும் பிறவும் கூறியுள்ளார். அங்காரகன் என்ற செவ்வாய்க் கிரகம், முருகனேடு தொடர்பு உடையது. சேய் என்ற பெயர் ஆட்டு வாகனம், நெருப்பின் தொடர்பு ஆதிய வாம். செவ்வாயின் பீடிதமிருப்பவர்களை முருகன் வழிபாடு செய்து கொள்ளச் சொல்வது மரபு. தசமகேந்திரம்-லக்கினத் துக்குப் பத்தாவது வீடு. கேந்திரம் மூலையிடம். அது முதற் பாடல் பாடுவர், பனையோலை யேட்டில் எழுத்தாணியால் தாமே எழுதுவர். இப்படிப்பட்ட பாடல்கள் வரிவடிவம் கோணு மலும், தனித்தனியாயும், ஒற்றுக்கு மேற் புள்ளி யில்லாமலும், இடையினரகரத்துக்குக் கீழே யிடும் சிறிய கோடில்லாமலும், 'கரப்பு' என்ற சொல், ''காப்பு'' என்றபடியே இருக்கும். அக்கால மரபு, காப்பு, கரப்பு கண்டு வாசிப்பாளு என்று மாண வன் திறமையை அறிய வினவுவார்களாம். முருகன்மீது ஊடல் காரணமாக—கடல், ஆறு, குளம், தீ இவற்றிலிட்டழித்த பாடல் போக இன்றிருப்பவை ஐம்பதாயிரம் கவிவரை யாகும். ஒரு பக்கம் எழுத்து மறுபக்கம் அழுந்தாமல் மென்மையா யெழுதப் பட்டு இருக்கும்.

"இட்ட பாடலும் அளவில இகத்தினில் விளக்கப்
பட்ட பாடலும் அளவில''

என்பர்.

அப்படி ஊடல் காரணமாகப் பாடலை யழித்தனராயினும், பின்பு தாமே இரங்கி முருகனை வேண்டுவர்; அவற்றைத் திருப்பித் தரும்படி தீயிலெரித்தும், கடலிற் குளத்தில், ஆற்றி லிட்டும் அழிந்த பாடல் எப்படி வரும்? இதற்கொரு விடையு முளது. திருநாவலூரர், அவிநாசியூர்க் குளத்தில், நீரில்லாத வெற்றேரியில், நீரும், முதலையும், மூன்ருண்டுகட்குமுன் அஃது உண்டு எருவாயான அந்தணமதலை அந்த வளர்ச்சியும் கொண்டு முதலை கக்கியதென்ருல், இதுவும் வரும். திருவருள் எது செய்யாது என்றறிய வேண்டும். முருகப் பெருமானும் தருவதாய்க் கூறினர். இதுமட்டுமன்று. இவரது முன்னைப் பிறவியான அருணகிரிநாதர் திருச்செந்தூர்க் கடலில் இட்ட திருப்புகழ்ப் பாடலமைந்த ஏட்டையும் சேர்த்துத் தருவோ மென்றனர்.

"அன்றுநீ அருணகிரி யாவுற்ற போதுகட
லதில்விடும் பாட லெல்லாம்
இன்றுதரு குதும்என் றிசைத்தனன்"
(திருச்செந்தூர்ச் சருக்கம் 23)

கல்வரைச் சண்முக வேள்அடி யான்எனக்
கவினும் பெயர் தாங்கிச்
செல்வமின் கேள்வனும் மெய்ப்பர மேயெனச்
செப்பித் திரிந் தாலும்
வல்வரை வில்லிநெல் வேலியில் ஓர்திரு
மணஞ்செய் தினத்(து) ஈந்த
நல்வரத் தால்மக வாகிய உண்மையை
நான்மாற் றஓண்ணுதே
பாலனை னத்திகழ் நாளிலே னக்கதன்
பண்புப் பெயர் இடுமா(று)
ஆலமர் தெய்வமொ ழிந்ததும், நீலம
தாகும் செவந்திப்பூ
மாலனை யானென நல்கலும், சாக்கிரம்
வந்தும் திகழ்மாண்பும்
சீலமி கப்பெறும் எந்தையும் உண்மையும்
சிலரும் தெரிவாரே. (சிவதரிசனச் சருக்கம். ம. 7.)

௲௫௫ ஆம் பக்கத்தில், பூமிகாத்தாள் அம்மன் வழிபாடு, பெயர்க் காரணம் கேட்டல், புதுக்கவி பாடி விளக்கல் பற்றிய செய்திகட்கு ஆதாரமான பாடல்.

"எனதுடற் பயந்தாள் முன்னைவாழ் சுரண்டைக்கு
எகினேன், எந்தையெற்(கு) ஆறு"

"வயதுவந் துறும்நாள் வயங்கும்விட் புலத்தின்
வாழ்க்கையெய் திய(து)ஒரு வாற்றால்
இயலும்நன் குணர்வான் வருடமொன் றந்நாள்
இருந்தனன் அந்தவூ ரிடத்தே"

என்றும்,

உரைத்தனம்; இனியவ் வூரிடை நிகழ்ந்த
வாறுசற் றுரைக்குதும் ஒளிர்பூண்
வரைத்தனப் பூமி காத்தவள் என்றோர்
அம்மனை வழிபடு கின்றார்
திரைக்கடல் போலும் பலருளார் அவரிற்
சீரிய ரிடந்தொறும் திகழ்இப்
பரைக்கிவண் நாமம் அமைந்தவா றென்றோ
பகர்மின்என் றனன், பகர்ந் தில்லார்.
இத்தனை சிறுவற் கெத்தனை துடுக்கென்(று)
இசைத்தனர் சிலர், சிலர் இவன்சொல்
உத்தமப் பகுதி யேயென வியந்தார்
உடன்அமு தங்கடைந் திடும்நாள்
மைத்தகை ஆலம் பிறந்ததைச்
சிவன்முன் வாரியுண் டனன்; வலக் கையால்
இத்தரை உய்யப் புரந்ததால் என்றோர்
இனியவெண் பாட்டிசைத் தேனே"

என வருவதாலறிக.

தமிழ்ப் பெரும் புலவர்
இ. மு. சுப்பிரமணிய பிள்ளை மறைவு

தமிழ்ப் பெரும் புலவரும், சித்த மருத்துவரும், கணியருமான திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் 24-3-75 இல் சங்கரன் கோயிலில் இறைபடி சேர்ந்தார்கள் என்ற செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறோம். அவர்தம் குடும்பத்தார்க்கும் தமிழறிஞர் பெருமக்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வரலாறு :

1896ஆம் ஆண்டு சூன் திங்கள் 6 ஆம் நாள் முதுபெரும் புலவர் இ. மு. சு. பிறந்தார். தந்தையார் சோதிட வித்துவானும் கவிஞரும் ஆகிய சு. முத்துசாமிப் பிள்ளையவர்கள் ஆவர். இவர் 1914 ஆம் ஆண்டில் பத்தாவது வகுப்பில் தேறி அந்த ஆண்டு நவம்பர் முதல் ஏழு ஆண்டுகள் பத்தமடை உயர் நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணி புரிந்தார். 1921 முதல் திருநெல்வேலி நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளிகளில் தலைமைத் தமிழாசிரியராகப் பணி புரிந்தார். சிதம்பரம் பண்டிதப் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து படித்து 1924—25இல் தேர்ச்சி பெற்றார். இவர் 1937இல் சென்னைப் பல்கலைக்கழக இடைத் தேர்வில் (இன்டர் மீடியேட்டு) தேறினார்.



கோவில் பட்டி ஆயுள்வேத பாற்கரர் சாமி விருதை சிவஞானயோகியவர்களிடம் ஏழாண்டுகள் சித்த மருத்துவத் துறையிற் பயின்று அரசாங்கத்தில் சித்த மருத்துவராகப் பதிவு பெற்றிருந்தார். 1951 முதல் இவர் தமிழ்நாடு சித்த வைத்திய சங்கத்தின் தலைவராக இருந்து பணியாற்றினார். கோயிற்பட்டியில் இருந்தபோது கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனாருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றார். எட்டயபுரம், பத்தமடை, மேலைச்செவல், கோவில்பட்டி, நான்குநேரி, சங்கரநயினார் கோயில் முதலிய ஊர்களில் கல்விக் கழகம், சைவ முன்னேற்றக் கழகம், தமிழ்ச் சங்கம் முதலியவற்றைத் தோற்றுவித்து வளர்த்தார். மாவட்ட, மாநில ஆசிரியர் மன்றங்களைத் தோற்றுவித்து வளர்த்துப் போற்றினார். 11-6-1934 இல் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவர்களுள் இவரும் ஒருவர். அதன் அமைச்சராக இருந்து இவர் ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் தமிழ்மொழிக்குச் சிறந்த தொண்டுகள் புரிந்தார். இச் சங்கத்தின் சார்பாக இவர் நெல்லை, சென்னை, தஞ்சை, மதுரை முதலிய இடங்களில் தமிழ் நலங்கருதி, மாகாணத் தமிழர் மாநாடுகள், புலவர் மாநாடுகள் முதலியவற்றை நடத்தினார்.

இச் சங்கத்தின் சார்பில் கலைச் சொல்லாக்க மாநாடுகள் சிலவற்றை நடத்திக் "கலைச் சொற்கள்" என்ற நூலை வெளியிட்டார். கலைச்சொற்களை

ஆக்கும்போது தமிழுக்கு இழுக்கு வாராதபடி பாதுகாத்து, தனித் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தும்படி செய்தார்.

நெல்லையிலும், சென்னையிலும் ஆட்சிச் சொல் மாநாடுகள் நடத்தினர். ஆட்சிச் சொற்களைத் தொகுத்துத் தமிழக அரசுக்கு உதவினர்.

நெல்லையில் சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத் தமிழ்க் கல்லூரி ஒன்றை 8-8-1946 இல் தொடங்கி அதன் அமைச்சராயிருந்து 5 ஆண்டுகள் நடத்தினர். உயர்நிலைப் பள்ளிகளில் தொடர்ந்து கற்க இயலாது இடையில் நிறுத்திய மாணவர் பலர் அதன்கண் கற்று விரைவில் கல்லூரி வகுப்புகளில் சேர்ந்து மேன்மையடைந்தனர்.

1948இல் சைவ வைணவ சமய விரிவுரையாளர் பயிற்சிக் கல்லூரி தொடங்கி அதன் அமைச்சராயிருந்து மூன்று திங்கள் நடத்தினர். கல்லூரி வகுப்புக்குப் பயன்படுமாறு தமிழ்ச் சொற்களை ஆக்கித் தமிழக அரசுக்குக் கொடுத்தார்.

நெல்லையில் நடத்திய மாகாணச் சித்த மருத்துவ மாநாட்டின் விளைவாகத் தென்காசியை அடுத்த பண்புளி—என்னும் ஊரில் சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றம் ஒன்று தொடங்கப் பெற்றது.

26-1-1958இல் தொடங்கி நடைபெறுகின்ற தமிழக அரசுத் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தில் தொடக்க காலம் முதல் இவர் உறுப்பினராய் இருந்தார்.

தமிழ்நாட்டில் நடைபெறுகின்ற கிராம சேவகர் பயிற்சிக் கல்லூரிகளில் இவர் சென்று அரசு ஆணைப்படி வானநூல், சித்த மருத்துவம், பற்றிய விரிவுரைகள் செய்துவந்தார். தமிழகப் புலவர் குழுவில் தொடக்க காலம் முதல் உறுப்பினராயிருந்து ஒவ்வொரு கூட்டத்திலும் தவறாது கலந்து தொண்டுகள் புரிந்தார்.

உயர்பள்ளி வகுப்புகட்கு இவர் எழுதிய இலக்கண இலக்கியப் பாட நூல்கள் பல. 'விவேக போதினி' என்ற திங்கள் இதழில் இவர் பாடிய "இராமாயண அகவல்" என்ற பகுதி வெளிவந்தது. "தமிழ்த் தாய்" என்ற முத் திங்கள் வெளியீட்டுக்கு இவர் மூன்று ஆண்டுகள் ஆசிரியராய் இருந்தார்.

"உலகப் பெரியார் காந்தி சிந்தாமணி" என்ற அகவல் நூலும், "உலகப் பொதுமறை திருக்குறள் ஒழுக்க முறை" "உலகப் பொதுச் சமயம்" "தம்பிரான்றேழர்" "ஐதராலி" முதலிய உரைநடை நூல்களும் இவரால் எழுதப் பெற்றன. தமிழ்நாட்டில் உள்ள நூறு கோவில்களுக்கு இவர் வரலாறு எழுதித்தந்துள்ளார். "நெல்லை மாவட்டக் கோவில் வரலாறு" என்ற சிறு நூல் கோவில் ஆட்சித் துறைத் தலைவரால் 1950-இல் வெளியிடப்பெற்றது

கம்பரையும் வான்மீகரையும் சீர்தூக்கி "இராமாயண ஆராய்ச்சி" என்னும் நூல் இவரால் எழுதப்பெற்றது. இவருக்கு "சந்திரசேகரப் பாவலர்" என்ற புனை பெயரும் உண்டு.

சென்னை மாநிலத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழாவில் சங்க வரலாறும், சொல்லடைவு, பொருளடைவு, தெளிவுரை, விளக்கவுரைகளுடன் திருமுருகாற்றுப்படையும் வெளிவந்தன. "இருபதாம் நூற்றுண்டுத்

தமிழ் வரலாறு'' என்னும் நூல் ஐந்து பகுதிகளாக வெளியிடப் பெற்றுள்ளது.

சித்தார்த்தி ஆண்டு (1919) முதல் இவர் சைவப் பஞ்சாங்கம் கணித்து, முதல் ஐந்து ஆண்டுகள் தாமே வெளியிட்டனர். பின்பு (1924) இரத்தாட்சி ஆண்டு முதல் ஐம்பத்தோராண்டுகள் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வழியாக வெளியிட்டு வந்தார். இவ்வாறு ஏறத்தாழ ஐம்பத்தாறு ஆண்டுகள் சைவப் பஞ்சாங்கம் வெளியிட்டது பாராட்டத்தக்க செயலே ஆகும்.

தமிழ்ப் பேரறிஞராக விளங்கிய கா. சு. பிள்ளையவர்களின் வரலாறும், நெல்லைத் தமிழ்ப் புலவர் வரலாறுகள் 1, 2-ஆம் பகுதிகளும் இளைஞர் தமிழ் இலக்கணம் 1 முதல் 3 படிவங்கட்குரியனவும் "ரிப்வான் விங்கிள்'' என்னும் நூலும் இவரால் எழுதப்பெற்றுக் கழக வழியாக வெளியிடப் பெற்றுள்ளன.

இவர் பத்தமடையில் ஆசிரியராக இருந்த காலத்தில் M. V. சுப்பிரமணியம் I. C. S. வேங்கடேஸ்வரன் I. C. S. ஆகிய இருவரும் இவரிடம் பயின்ற மாணவர்கள் ஆவர்.

கழுகு மலை—வை. பூ—சோமசுந்தரம் எம். ஏ., பி. டி. அவர்கள் இயற்றிய இரங்கற் கவிகள் அடியிற் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழுணர்வின் பிறப்பிடமே!

[கழுகுமலை வை. பூ. சோமசுந்தரம் எம். ஏ., பி. டி.]

கலைச்சொற்கள் ஆக்குவித்த கனிதமிழின் வேந்தர்
நிலையான வரலாறு நெறிப்படுத்த நல்லார்
வானியலும் மருத்துவமும் வண்டமிழும் வல்லார்
கோனியலும் கோணியலும் கொண்டுணர்ந்த நம்பி!
புலவரவை மணந்திருக்கப் பொலிந்திருந்த செம்மல்!
போய்மறைந்தார் இ. மு. சு. பொங்கிவரும் துன்பம்!
தமிழுணர்வின் பிறப்பிடமே, தாழ்வில்லா உழைப்பே!
அமிழ்தனைய கருத்தூறும் அருநெஞ்சக் கடலே!
மறைந்திரோ விரைந்திரோ வாட்டுதுநும் பிரிவே!
வளர்த்திரே தமிழ்ப்பயிரே! வடித்திடும்கண் ணீரே!

முசிரி சுப்பிரமணிய ஐயர் மறைவு

'சங்கீத கலாநிதி' 'இசைப் பேரறிஞர்' என்னும் சிறப்புப் பட்டங்களைப் பெற்று விளங்கிய, கருநாடக இசை வல்லுநர் திரு முசிரி சுப்பிரமணிய ஐயர் அவர்கள் 24-3-75இல் சென்னையில் தமது 75ஆவது அகவையில் காலமானார் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். இவர்தம் நீண்ட கால இசைத் தொண்டினைப் பாராட்டு முகத்தான் 1971இல் இந்திய அரசினர் 'பத்ம பூடணம்' என்னும் பட்டத்தை அளித்துச் சிறப்பித்தனர்.

டி. வி. எஸ். நிறுவனத்
தொழில் மேதை டி. எஸ். கிருஷ்ணா பிரிவு

தென்னகத்தின் சாலைப் போக்கு வரத்துத் துறையின் வழிகாட்டியாகத் திகழ்ந்த காலஞ்சென்ற டி. வி. சுந்தரம் ஐயங்காரின் மூன்றாவது திரு மகனாக 1910 ஆகஸ்ட்டு 10 ஆம் நாள் தோன்றியவர் திரு டி. எஸ். கிருஷ்ணா. மதுரையில் பள்ளிக் கல்வியைப் பெற்ற பின் அவர் அமெரிக்க நாட்டு டெட்ராய்ட் நகரிலுள்ள ஜெனரல் மோட்டார்ஸ் தொழில் நுட்பப் பள்ளியில் தொழில் நுட்பப் பயிற்சி பெற்றார். எதையுமே சிறுவயதிலிருந்து நுணுகிப் பார்க்கும் ஆர்வம் மேனாட்டில் அவர் பெற்ற கல்வியால் உருப்பெற்றது.

தாயகம் திரும்பியபின் அவர் தம் தவத் தந்தையாரின் தொழிலில் இணைந்து கொண்டார். தொடக்க காலத்திலிருந்தே இந்தியச் சூழ்நிலையின் மாறிவரும் தேவைகளுக்கேற்ப மேனாட்டுத் தொழில் நுட்ப முறையைக் கையாளுவதில் அவர் சிறந்து விளங்கினார். மதுரை டி. வி. எஸ் பணிமனைகளில் புது முறைகளைப் புகுத்தி ஒழுங்கு படுத்தியதோடு அவற்றைச் செயல்படுத்துவதன் மூலம் கிடைக்கப் பெறும் ஊதியத்தில் பெரும் பகுதி தொழிலாளர்கட்கே போய்ச் சேருமாறு பார்த்துக்கொண்டார். தம்மால் செய்ய முடியாத எந்த வேலையையும் அவர் தொழிலாளர்களைச் செய்யச் சொல்ல மாட்டார். அத்துடன் தொழிலாளர்கள் அனைவரையும் நன்கு தெரிந்து வைத்திருந்தார். அதனால் அவ்வனைவருடைய நம்பிக்கையையும் மதிப்பையும் அன்பையும் பெற்றிருந்தார். அவருடைய முதலீட்டாளர்—தொழிலாளர் உறவு முறைகள் நாடெங்கும் புகழ் பெற்றதாகும். அவருடைய நிறுவனத்தில் பணியாற்றும் தனிப்பட்ட ஒவ்வொரு தொழிலாளர் நலனிலும் அவர் அக்கறை காட்டிவந்ததால் தொழிலாளர்கள் அனைவரும் அவரைப் புகழ்கின்றனர்.



இரண்டாம் உலகப் போரின்போது இந்திய அரசு 'போர்ப் போக்குவரத்துத் துறை'க்காக அவர் உதவியை நாடியது. அதன் இணைச் செயலராக அவர் பணி புரிந்தார். போர்க் காலத்தில் பெட்ரோல் பற்றாக்குறையைப் போக்குவதற்கு 'டி. வி. எஸ். எரிவாயு நிலையத்தை' உருவாக்கினார். உணவுப் பெருக்கத்திலிருந்து குடும்பக் கட்டுப்பாடு வரை—பல துறைகளில் அவருக்கு ஈடுபாடு இருந்தது. எப்போதும் இந்தியாவின் முன்னேற்றந்தான் அவருடைய சிந்தனையிலிருந்தது.

போக்குவரத்துத் துறையில் அவருக்கிருந்த புகழையும் அவருடைய ஆட்சித் திறனையும் இந்திய அரசு போற்றும் வகையில் பல குழுக்களில் அவரை உறுப்பினராக்கியது. விசாகப்பட்டினத்திலுள்ள 'பாரத் கனத் தகடு, கலன்கள்' நிறுவனத்தின் தலைவராக அவரை அமைத்திருந்தது.

லூகாஸ் டி. வி. எஸ். நிறுவனம், ஆங்கிலோ பிரெஞ்சு ஆலை நிறுவனம், சுந்தரம் ஆலை நிறுவனம் ஆகியவற்றின் தலைவராகவும் சதர்ன் ரோடுவேஸ் நிறுவனத்தின் ஆட்சியாளராகவும் டி. வி. சுந்தரம் ஐயங்கார் அண்டு சன்ஸ் நிறுவனத்தின் இயக்குநராகவும் அவர் திகழ்ந்தார்.

திரு கிருஷ்ணு சிறந்த நாட்டுப் பற்றுளர். நல்ல பண்புகள் நிறைந்த உருவினர். எல்லோர்க்கும் எளிய நண்பராகத் திகழ்ந்தவர். அவருடைய விருந்தோம்பல் பண்பு அனைவரும் அறிந்தது.

உலகம் முழுவதும் தொழில் முதலிய பல துறைகளில் அவருக்கு ஏராளமான நண்பர்கள் இருந்தனர். எல்லோரும் அவரை மதித்தனர். பல நெருக்கடி நேரங்களில் அவருடைய அறிவுரைகளைப் பலர் நாடினர்.

மதுரைச் சுழற் கழகத்தை நிறுவிய உறுப்பினர்களில் ஒருவர். மதுரை—இராமநாதபுரம் வணிகப் பேரமைப்பின் தலைவராகவும் அவர் திகழ்ந்தார்.

அவர்தம் துணைவியாரும், மூன்று ஆண் மக்களும் ஒரு பெண் மகளும் அவரைப் பிரிந்து பெரிதும் வருந்துகின்றனர். அவருடைய தொழிற் றுறையினல் வாழ்ந்துவரும் மக்கள் அனைவரும் வருந்துகின்றமை செய்தி இதழ்களின்வழி அறிகின்றோம். அவர்களுடைய குடும்பத்தினர்க்கும் அவரது உழைப்பால் வாழ்ந்துவரும் மக்களனைவருக்கும் எங்களுடைய ஆறுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பேருள்ளம் படைத்த இவர்தம் அயரா உழைப்பினல் இவர்தம் நிறுவனங்களில் பணிபுரியும் பல்லாயிர மக்களும், அந்நிறுவனங்களில் படைக்கப்பெறும் பொருள்களின் துணை கொண்டு பல்லாயிர மக்களும் பிழைக்கின்றனர் என்று சொன்னல் அது மிகையாகாது. அவருக்கு மீண்டும் பிறப்புண்டேல் தமிழ்நாட்டிலே பிறந்து விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து செய்து புகழ் புண்ணியங் களைப் பெற்றுய்தி பெறுவாராக !

"நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயின்
படமாடக் கோயில் பகவற்கஃ தாமே." —திருமந்திரம்

சோழர் காலச் சிலைகள் தோண்டி எடுக்கப்பட்டன

தஞ்சை மாவட்டத்திலுள்ள கங்கைகொண்ட சோழபுரம் கோவிலைச் சார்ந்துள்ள நிலத்திலிருந்து, சோழர்காலச் சிலைகளான ஏழு சூரியன் சிலைகள் தோண்டி எடுக்கப்பட்டன. இந்த அகழ்வாராய்ச்சியினை இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் மேற்கொண்டனர். அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதுபோன்று 12 சிலைகள் இருக்கவேண்டு மெனவும் எஞ்சியுள்ள 5 சிலைகள் பின்னர்க் கண்டுபிடிக்கப்படலாம் எனவும் சொல்லப்படுகிறது. இச் சிலைகள் ஒன்றரை மீட்டர் உயரத்தில் அழகிய சிற்ப வேலைப்பாடும் அமைந்தனவாகக் காணப்படுகின்றன.

இவ்வளவு பெரிய சூரியன் சிலைகள் நாட்டில் வேறெங்கும் இதுகாறும் காணப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது. மாயூரத்திற் கண்மையி லுள்ள சூரியனுர் கோயில் என்னும் இடத்தில்மட்டும் இதுபோன்று ஒரே யொரு சிலை உள்ளது.

மழைவேண்டல் வழிபாடு

திருநெல்வேலி சைவ சித்தாந்த சங்கத்தின் சார்பில் 9-3-75 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை மழை வேண்டல் விழா சென்னை இலிங்கிச் செட்டித் தெரு மறைமலையடிகள் நூல்நிலையத்தின் மேன்மாடியில் உள்ள வள்ளலார் திருவருள் மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவின் தொடக்கத்தில் கழகத்தின் ஆட்சி முதல்வர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்கள் விழாவுக்கு வந்திருந்த ஓதுவார்கள் அன்பர்கள் அனைவரையும் வரவேற்று மழையின் இன்றியமையாமையை விளக்கினார்கள். தருமையாதீனம் சென்னைக் கிளைநிலையத்தின் பொறுப்பாளராகிய தவத்திரு மகாலிங்கத் தம்பிரான் அவர்கள் விழாவைத் தொடங்கி வைத்தார்கள். திருக்களர் சுந்தரேச தேசிகர், காஞ்சிபுரம் ஆ. விநாயக முதலியார், சைதை நடராசன் முதலிய பதினைந்து தமிழிசை வாணர்களாகிய ஓதுவார்கள் கலந்துகொண்டு தேவாரப் பாடல்களைப் பண்ணோடு பாடினார்கள். தவயோகி சுத்தானந்த பாரதியாரவர்கள் இசைப்பாடல்களைப் பாடியதோடு அரிய கருத்து நிறைந்த சொற்பொழிவும் ஆற்றினர்.

சென்னை (கஸ்டம்ஸ் கலெக்டர்—ஓய்வு) சுங்கச் சாவடி தண்டல் நாயகமாய் இருந்த திரு கா. சரவணபிள்ளை அவர்களின் ஆனர்சு பட்டம் பெற்ற பெண்கள் இருவராகிய திருவளர் செல்வியர் திலகவதியும், ஆவுடையம்மையும் அபிராமி அந்தாதிப் பாடல்களுள் சிலவற்றைக் கேட்டோர் மனம் உருகும்படி இன்னிசையோடு பாடினர்.

இவ் விழாவிலே உமையம்மை வழிபாட்டை இசைத்தட்டில் பாடியமைத்த இசைப் பேரரசி சேலம் செயலட்சுமி அம்மையாரும், திருவருட்பாப் பாடல்களைப் பண் அமைத்துப் பாடும் இசைப் பேரரசி குருவாயூர் பொன்னம்மாள் அவர்களும் வந்து பாடியமை மிகவும் போற்றி மகிழ்தற் குரியது.

இந்த விழாவின் சார்பாக "மழையே வா" என்னும் நூலை, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்பமை திரு. மகராசன் அவர்கள் வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார்கள். விழா தொடங்குமுன் நூல்நிலையத்தினருகேயுள்ள மல்லிகேசுவரர் கோயிலில் மழைவேண்டிச் சிறப்பு வழிபாடு நடத்தப்பெற்றது.

செய்திகளும் குறிப்புகளும்

உலகத் தமிழர்கள் பங்குகொள்ளும் பெருவிழா !

உலகெங்கும் வாழும் தமிழர்களின் பகராட்கள் கலந்துகொள்ளும் தமிழ்ப் பண்பாட்டுப் பெருவிழா ஒன்று 1975 டிசம்பரில் தமிழ் நாட்டிலே நடைபெற இருக்கிறது. விழாவை ஏற்பாடு செய்கிற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் இது பற்றி மேலும் தெரிவிப்பதாவது :

1974 சனவரியில் யாழ்ப்பாணத்தில் உருவான உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இதுவரை பர்மா, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை, இந்தோனேசியா, இங்கிலாந்து, பிஜி, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் படர்ந்து பரவியுள்ளது. பல நாடுகளில் ஏற்பட்டுள்ள இந்த ஆர்வத்தை வளர்த்துப் பரப்பி, தமிழ்மக்களை எல்லாம், பண்பாட்டு அடிப்படையில் ஒன்றுசேர்க்கும் நோக்கத்துடனேயே மேற்படி விழாவை இயக்க ஏற்பாடு செய்கிறது. சென்னை நகரத்தில் தொடங்கி, சுமார் மூன்று வார காலம், தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் விழாவை நடத்துவது என்று இயக்கம் திட்டமிட்டுள்ளது.

விழாவின் அமைப்பு முறை பின்வருமாறு: தமிழே தெரியாத தமிழர்களுக்குத் தமிழ் வகுப்புகள்,—தமிழக வரலாறு மற்றும் தமிழ் இலக்கியம் பற்றிய சொற்பொழிவுகள்,-தமிழ் இசை, தமிழக நாட்டுப்புறக் கலைகள், தமிழ் நடனம், நாடகம் பற்றிய கருத்தரங்குகள், இவைகளே பண்பாட்டு விழாவின் முக்கிய நிகழ்ச்சிகள். இவை தவிர, தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் தமிழ்மக்களின் உலக நாகரிகத் தொடர்புறவையும் விளக்கும் கண்காட்சி ஒன்றும் அமைக்கப்படுகிறது. மாலை நேரங்களில், வெளிநாட்டுத் தமிழர்கள், அங்கங்கே நடத்தப்படும் கலைநிகழ்ச்சிகளைக் கண்டு களிப்பார்கள். கடைசி ஒரு வாரத்தில், அவர்கள், தமிழகத்தின் முக்கியமான இடங்களை எல்லாம் கண்டு வரவும், அங்கங்கே அவர்களுக்கு வாழ்த்தும் வரவேற்பும் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் தலைமையில், பதினன்கு இளைய அறிஞர்களைக் கொண்ட விழாக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விவரங்களைப் செய்தி இதழ்களுக்குத் தெரிவித்துள்ள டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள், உலகெங்கும் உள்ள அனைத்துத் தமிழர் களும் விழாவுக்குத் தங்கள் முழுமையான ஆதரவைத் தரவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொண்டுள்ளார். இயக்கத்தில் சேரவும் விழாவில் பங்கு கொள்ளவும் பொருள் உதவி செய்யவும் விரும்பு வோர், இயக்கத்தின் தலைவர், டாக்டர் சாலை இளந்திரையன் (3362-1 கிறிஸ்டியன் காலனி, புதுடில்லி-5.) அவர்களுடன் தொடர்பு கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"தினமணி" துணையாசிரியர் திரு. ஏ. ஜி. வெங்கடாச்சாரியார் மறைவு

புகழ் பெற்ற இதழ் எழுத்தாளரும், இதழுலகிலும், அரசியல் உலகிலும், பொருளியல் வல்லுநர்களிடையிலும் ஏ. ஜி. வி. என்று சுருக்க மாகவும் அன்புடனும் அழைக்கப்பெற்று வந்தவருமான 'தினமணி' துணையாசிரியர் திரு. ஏ. ஜி. வெங்கடாச்சாரி அவர்கள் 28-2-75இல் தமது 67ஆவது அகவையில் காலமானர் என்ற செய்தியறிந்து பெரிதும் வருந்து கிறோம்.

திரு. வெங்கடாச்சாரி அவர்கள் தர்மபுரி மாவட்டத்தில் 1908ஆம் ஆண்டு தோன்றினர். தமது பட்டப்படிப்பைச் சென்னை லயோலா கல்லூரியில் துவங்கி பி. ஏ. பட்டம் பெற்றார். 'ஜெயபாரதி' என்ற இதழில் சிலகாலம் பணியாற்றியபின் 'தினமணி' துவங்கப்பட்டபோது அதில் ஆசிரியப் பணியினை ஏற்று நாற்பது ஆண்டுகட்கு மேலாகப் பணியாற்றி வந்தார்.

தமிழ், ஆங்கிலம், சமக்கிரதம் ஆகிய மொழிகளில் வல்லுநராக இருந்தார். ஆங்கிலத்திலும், தமிழிலும் பல புத்தகங்கள் எழுதியுள்ளார். "ரூஸ்வெல்ட்டும் புது அமெரிக்காவும்" என்ற ஆங்கில நூலை 1944இல் எழுதினர். "ஹிட்லரும் உலகப் போரும்", "சீனவும் சப்பானும்" "சீனிவாச ஐயங்காரின் அரசியல் சிந்தனைகள்" "ஆசியாவின் எதிர்காலம்" "சோவியத் யூனியன்" "மனித உரிமைகள்" ஆகிய தமிழ் நூல்களை எழுதி யுள்ளார். இவர் சாகித்ய அகாடமி உறுப்பினராகவும், 1957இல் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் இருந்தார்.

இங்ஙனம் பல்லாற்றானும் பழுத்த பட்டறிவு பெற்ற இவர்தம் பிரிவு இதழுலகிற்கும் அரசியல், தொழில் உலகிற்கும் பேரிழப்பாகும்.

டாக்டர் இராதாகிருட்டிணன் அவர்கட்கு டெம்பிள்டன் பரிசு

சமய முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருட்டிணன் அவர்கட்கு அமெரிக்கப் பெருமகனார் ஜான் டெம்பிள்டன் அமைத்த விருதினை, 27-3-75இல் இலண்டன் மாநகரில் எலிசபெத் இளவரசியார், இந்திய அரசின் உயர் ஆணையர் திரு. பி. கே. நேரு அவர்களிடம் வழங்கினர். இப் பரிசுத் தொகை 7,84,000 வெண்பொற் காசுகளாகும் என்பது முன்னரே குறிப்பிடப் பட்டுள்ளது.

எம். எஸ். சுப்புலட்சுமிக்கு 'பத்ம விபூடண' பட்டம்

தமிழகத்தில் புகழ்பெற்ற நல்லிசைப் பெருமாட்டி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கட்கு இவ்வாண்டு 'பத்ம விபூடணம்' என்னும் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. இப்பட்டமளிப்பு விழா 29-3-75இல் புது தில்லியில் நடைபெற்றது. குடியரசுத் தலைவர் மாண்புமிகு பக்ருதீன் அலி அகமது அவர்கள் இப் பரிசினை வழங்கினார்.

நக்கீரர் கழகத் தமிழ்ப் பணிகள்

சென்னை நக்கீரர் கழகத் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் 31ஆம் ஆண்டு நிறைவு விழாவும், பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுச் சொற்பொழிவுகளின் தொடக்க விழாவும், கல்வி நெறிக் காவலர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழாவும் 2-3-75 மாலை சென்னை மாநிலக் கல்லூரியில் நடைபெற்றது. திரு. எஸ். வடிவேல் பிள்ளையவர்கள் தலைமை தாங்கினார். திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களின் படத்தை நாடாளுமன்ற உறுப்பினர், திரு. கா. து. நடராசன், எம். ஏ., பி. எல்., அவர்கள் திறந்து வைத்தார்கள். புலவர் பெருமக்கள் பலர் கருத்துரை வழங்கினர்.

மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கட்குப் பாராட்டு

மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சை. வே. சிட்டிபாபு அவர்கட்கு 27-3-75 வியாழக் கிழமை மாலை சென்னை இராயப்பேட்டை ஓட்டல் சுவாகத்தில், தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் தலைமையில், மாநகரத் தமிழாசிரியர் கழகத்தின் சார்பில் பாராட்டு விருந்து நடைபெற்றது.

பல்கலைச் செல்வர் வாழி

(கவிஞர் செல்வ பாரதி)

மதுரமனம் கொண்டெங்கள் மனத்தி லென்றும்
மகிழும்பூ மணம்படைக்கச் செய்யும் வேந்தே
மதுரைநகர் அன்னைமனம் மகிழும் வண்ணம்
மங்காத புகழ்வளர்த்துக் கல்வித் தொண்டு
நிதமாற்ற மதுரைநகர் சென்றி ரேனும்
நீலமணி இமைவிட்டுப் பிரிய மாட்டீர்!
விதமான கலைகளெலாம் இந்த மண்ணில்
விளைந்திருக்க வழிகண்டீர்! நீடு வாழ்க!

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்திற்காக சென்னை-600001, 2-140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

வாணிபத்தின் கதை

ஆசிரியர் : மா. பா. குருசாமி, எம்.ஏ., டி. ஜி. டி.

வாணிபம் என்றால் என்ன ? அஃது எப்போது எப்படித் தோன்றிற்று ? அதன் வளர்ச்சிப் படிமுறைகள் யாவை ? என்பன போன்ற செய்திகளைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் நூல்.

விலை ரூ. 1 75

நம்மைச் சுற்றி நாற்பது உயிர்கள் (முதற் பாகம்)

ஆசிரியர் : மா. பா. குருசாமி, எம்.ஏ., டி.ஜி.டி.

நம்மைச் சுற்றி வாழும் ஈ, எறும்பு, கொசு, மூட்டைப் பூச்சி, கறையான், தேனீ, சிலந்தி, நத்தை, நண்டு, தவளை, நல்லபாம்பு, ஆமை, முதலை, பச்சோந்தி, வாத்து, கோழி, கிளி இன்னபிற ஊர்வன, நடப்பன, பறப்பன வாகிய உயிர்களைப் பற்றிச் சுருக்க மாகவும் இனிய எளிய தமிழ் நடையிலும் கூறுகிறது இந்நூல்.

விலை ரூ. 3 50

இராபின்சன் குரூசோ (சுருக்கப் பதிப்பு)

பேராசிரியர் : தி. செல்வக் கேசவராய முதலியார்.

இராபின்சன் குரூசோ என்னும் ஆங்கிலப் புதினத்தின் சுருக்கப் பதிப்பு இது. பெற்றோர் சொல்கேளாத சிறுவன் ஒருவன் கடற் பயணத்தை மேற்கொண்டு அதனால் பெற்ற அல்லல்களை விளக்கும் கதை. முயற்சியால்தான் மனிதன் நாகரிகம் அடைகிறான் என்னும் உண்மையையும் உணர்த்துகிறது. பள்ளி மாணவர்கள் படிக்க வேண்டிய நூல். விலை ரூ. 2 50

நாலடியார் தெளிவுரை—புலவர் இரா. இளங்குமரன்

திருக்குறள் தெளிவுரையினைப் போன்றது இந்நூல். நூலின் வலப்பக்கத்தில் மூலமும் இடப்பக்கத்தில் உரையுமாக அமைந்து படிப்போர்க்குத் தெளிவினை உண்டுபண்ணக் கூடிய கையடக்கமான அழகிய பதிப்பு. ரூ. 5 00

புகழ் நூற் கோவைகள்

இறையன்பர்கள் எளிதில் மனப்பாடம் செய்தற்கும், ஓதி வழிபடுதற்கும் ஏற்ற முறையில் தொகுக்கப் பெற்ற கையடக்கமான அழகிய பதிப்பாக கீழ்க்காணும் நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளன.

விநாயகர் புகழ்நூற் கோவை	ரூ. 1 20
முருகன் புகழ்நூற் கோவை	,,
சிவபெருமான் புகழ்நூற் கோவை	,,
உமையம்மை புகழ்நூற் கோவை	,,
மாணவர் செய்யுட் கோவை	,,
அம்பலவாணர் புகழ்நூற் கோவை	,,

பதிவு எண் : M. 4899

வெளியார் புதிய வெளியீடுகள்

கெடிலக் கரை நாகரிகம்

ஆசிரியர் : புலவர், சுந்தர சண்முகனர், பி.ஏ.

ஆற்றங்கரைகளை யடுத்து வளரும் நாகரிகங்கள் பல. அவற்றுள் தமிழ் நாட்டில் கெடிலம் ஆறு பாயும் பகுதியாகிய தென்னர்க்காடு மாவட்டத்தின் நாகரிகம் மிகச் சிறப்பு வாய்ந்தது.

கெடிலக் கரையின் தோற்றம், அது பாயும் பகுதிகளின் சிறப்பு, அது கடலில் கலக்கும் இடத்தின் மாண்பு, இவ் ஆற்றினல் வளமும் புகழும் பெறும் பகுதிகள், திருக்கோயில் களின் வரலாறுகள், கலைக் கூடங்கள், அரசினர் பணி மனைகள், தொழிலகங்கள் இன்ன பிறவற்றைப் பற்றிய செய்திகளை இந்நூலில் விரிவாகக் காணலாம்.

செய்திகள் அனைத்தும் தக்க இலக்கிய மேற்கோள் களோடும், அகப்புறச் சான்றுகளோடும் விளக்கப் பெற் றுள்ளன. **51** விளக்கப்படங்களுடன் அழகிய பதிப்பாக 650 பக்கங்களில் வெளிவந்துள்ளது. விலை. **22 - 50**

இன்று புதிதாய்ப் பிறந்தோம் (இருபகுதிகள்)	வையவன்	20	00
திருச்சிற்றம்பலம்	ஜெகசிற்பியன்	15	00
சங்க இலக்கியத்தில் பாடாண் திணை	நா செயராமன்	15	00
சிலப்பதிகாரத் திறனய்வு	ம. பொ. சிவஞானம்	12	00
பாரதியாரின் பாதையிலே	,,	5	50
மொழி ஒப்பியலும் வரலாறும்	பேராசிரியர் டாக்டர் இரா. சீனிவாசன்	10	00
தொல்காப்பிய ஒப்பியல்	க. ப. அறவாணன்	10	00
சுழிக்காற்று	கௌசிகன்	10	00
தொல்காப்பியர்	ப. அருணசலம்	7	50
கம்பன் காவிய சாரம்	எஸ். நல்லபெருமாள்	7	00
சிந்தனைச் செல்வம்	கிருபானந்தவாரியார்	7	00
நான்கண்ட நாலு நாடுகள்	சாவி	7	00
அப்பர் குறுந்தொகை ஐம்பது	புலவர் ச. சாம்பசிவனர், பி. ஏ.,	2	00
மாமறை முனிவர்	,,	2	50
மாநகர் மதுரை	,,	7	00
வள்ளலார் அமுத மொழிகள் ஆயிரம்	அ லெ. நடராசன்	5	00
அமுத சாகரம்	க. ப. அறவாணன்	4	00
இந்திர காளியம் விளக்கத்துடன்	,,	2	00

அப்பர் அச்சகம், சென்னை-600 001.